305

ஸம்புடம் 11
ஸஞ்சிகை 1

ஸ்ரீ:

கர-ஹுல
தை-மீ

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

ஸ்ரீ அழகியசிங்கர் நியமநத்தால்
மாதந்தோறும் ப்ரசுரமாகும்
ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகை

ஸம்பாதகர்

P. S. ஸ்ரீநிவாஸ தேசிகாசார்யர், M. A., B. L. சிரோமணி.
(அட்வொகேட்)

ப்ரசுரிக்குமிடம்

நெ. 2. ஆதியப்பமுதலி தெரு, புரசவாக்கம், சென்னை 7.

தனிப்ரதி விலை 0–4–0

வர்ஷச்சந்தா
ரூபாய் 3-0-0

JANUARY 1952
VOL 11 NO 1.

விஷய ஸூசிகை

விஷயம் பக்கம்

1. உபயவேதாந்த ஐககண்ட்யம் ... 2
[ஸ்ரீ. உப. A. V. கோபாலாசார்ய ஸ்வாமி, B. A. B. L. அட்வோகேட், திருச்சி.]

2. ஸௌஜந்ய பரிமளம் ... 4
[ஸ்ரீ. உப. வித்வான் திருவரங்கம் திருமலைதாதாசார்ய ஸ்வாமி, M. O. L., திருப்பதி.]

3. கோதை தமிழும் கோதாஸ்துதியும் ... 6
[ஸ்ரீ. உப. தி. ராமஸ்வாமி அய்யங்கார் ஸ்வாமி, அட்வோகேட், சென்னை.]

4, பீஷ்மாச்ரம தத்வம் ... 9
[ஸ்ரீ. உப. வித்வான் கருடபுரம் தி. ஈ. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி, மதுராந்தகம்.]

5. ஸதுபதேசம் ... 13
[ஸ்ரீ அஹோபிலமடம் ஆஸ்தானவித்வான்
ஸ்ரீ. உப. முக்கூர் ராஜகோபாலாசார்ய ஸ்வாமி, திருவள்ளூர்.]

6. செய்திகள் ... 15

7. ஸம்பாதகரின் குறிப்புகள் ... 17

8. கோதாஸ்துதி
[ஸ்ரீ. உப. வித்வான் மேல்பாக்கம் நரஸிம்ஹாசார்ய ஸ்வாமி,
வ்யாகரணாத்யாபகர், ஸம்ஸ்க்ருத கலாசாலை, மதுராந்தகம்.]

ஸ்ரீ:

பஞ்சாங்க ஸங்க்ரஹம்

கர-ஹூ மாசி-மீ 1952-பிப்ரவரி-மார்ச்-மீ

[உத்தராயணம்-சிசிர ருது மகர-மீ]

13—2—52	1உ	புதன்கிழமை	...	கும்பக்ருஷ்ண த்ருதீயை திதி. (இன்று கும்பஸங்க்ரமண தர்ப்பணம்)
18—2—52	6உ	திங்கட்கிழமை	...	அஷ்டகா.
19—2—52	7உ	செவ்வாய்க்கிழமை	...	அந்வஷ்டகா.
21—2—52	9உ	வியாழக்கிழமை	...	ஸர்வ ஏகாதசி.
24—2—52	12உ	ஞாயிற்றுக்கிழமை	...	போதாயன அமாவாஸ்யை.
25—2—52	13உ	திங்கட்கிழமை	...	அமாவாஸ்யை; அமை-ப்ரதமை திதி த்வயம்
5—3—52	22உ	புதன்கிழமை	...	தசமி திதி.
6—3—52	23உ	வியாழக்கிழமை	...	அதிதி.
7—3—52	24உ	வெள்ளிக்கிழமை	...	ஏகாதசி திதி; ஸர்வ ஏகாதசி. குலசேகராழ்வார் திருநக்ஷத்ரம்.
8—3—52	25உ	சனிக்கிழமை	...	புஷ்யம்; ஸ்ரீ அஹோபிலமடம் 37-வது பட்டம் (பிள்ளைபாக்கம்) ஸ்ரீவீரராகவ சடகோப யதீந்த்ரமஹாதேசிகன் திருநக்ஷத்ரம்
10—3—52	27உ.	திங்கட்கிழமை	...	மாசி மகம்
13—3—52	30உ	வியாழக்கிழமை	...	கும்பக்ருஷ்ண த்விதீயை திதி. மீனரவி 37-34 (இன்று ஸங்க்ரமண தர்ப்பணம்)

𑌶𑍍𑌰𑍀𑌃

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃



ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

ஸம்புடம் 11 } கர ஹூ தை மீ {ஸஞ்சிகை 1

'𑌅𑌹𑍋𑌬𑌿𑌲𑍇 𑌗𑌾𑌰𑍁𑌡𑌶𑍈𑌲𑌮𑌧𑍍𑌯𑍇
𑌕𑍃𑌪𑌾𑌵𑌶𑌾𑌤𑍍𑌕𑌲𑍍𑌪𑌿𑌤𑌸𑌨𑍍𑌨𑌿𑌧𑌾𑌨𑌃 ।
𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍍𑌯𑌾𑌸𑌮𑌾𑌲𑌿𑌙𑍍𑌗𑌿𑌤𑌵𑌾𑌮𑌭𑌾𑌗𑌂
𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌂 𑌶𑌰𑌣𑌂 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑍇 ॥'

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்.

𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌿𑌯𑌾 𑌶𑍍𑌰𑍀𑌮𑌨𑍍𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌕𑌰𑍁𑌣𑍋𑌦𑍍𑌭𑌵𑌾 ।
𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌕𑌟𑌾𑌕𑍍𑌷𑍇𑌣 𑌜𑍀𑌯𑌾𑌦𑌾𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌤𑌾𑌰𑌕𑌮𑍍 ॥
𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌭𑌕𑍍𑌤𑌾𑌨𑌾𑌂 𑌗𑍇𑌹𑍇 𑌗𑍇𑌹𑍇 𑌸𑌦𑌾 𑌵𑌸𑍇𑌤𑍍 ।
𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌿𑌯𑌾𑌹𑍍𑌯𑍇𑌷𑌾 𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌿𑌯𑌯𑌾 𑌸𑌹 ॥

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா' என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக்கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா' என்னும் பத்ரிகை, ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹாலக்ஷ்மியுடன் நித்யமாக, வஸிக்கக்கடவது.]

ஸ்ரீ:

உபயவேதாந்த ஐககண்ட்யம்

(10-வது ஸம்புடம் 12-வது ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

இந்த முதல் பாதம் முழுவதும் ஸம்ஸாரத்தில் வைராக்யத்தையும் அதிலிருக்கும் அத்யந்த கோரமான விழவுகளையும் ஒரு தேஹத்தைவிட்டு மற்றொரு மானிடதேஹம் பஞ்சாக்நிவித்தையில் கூறப்பட்டபடி மறுபடியும் யோஷித் கர்பத்தில் ப்ரவேசம் கிடைத்து வளர்ந்து ‘யோநே: ஶரீரம்’ என்று இப்பாதக் கடைசி ஸூத்ரத்தில் கூறியபடி ஸ்த்ரீ கர்ப்பத்திலிருந்து அங்கே கேவலம் ஈச்வர கருணையால் இவனுடைய நினைப்பு லேசமும் ப்ரயத்ந லேசமுமின்றி அதிவிசித்ரமாக லக்ஷக்கணக்கான அநேகவிதமான நாடிகளோடும், ரக்தாசயம், ச்வாஸப்பை முதலிய அத்புதமாக நம் ப்ரயத்நமின்றியே யாவதாயுஷம் வேலைசெய்யும் பைகளோடும் அஸ்திபாரமான வஸ்திகளோடும் அமைக்கப்பட்டு வெளியே வருவதையும், இப்படி முன்தேஹத்தைவிட்டு ஸ்வர்க்காதி புண்யலோகத்திற்குச்சென்று அங்கே புண்யம் துளி பாக்கியிருந்து க்ஷீணமாகும் ஸமயத்தில் அங்கிருந்து தள்ளப்பட்டு மற்றொரு மனுஷ்ய சரீரம் வருகிறவரையிலுள்ள யாதாயாதங்களையும், அத்யந்தம் அவசமான அல்லாட்டங்களையும் இந்தப் பாத ஸூத்ரங்கள் விவரிப்பதை ஸூசித்துக்கொண்டு ‘வீடுமின், வீடுமின்’ என்று உரக்கக் கூப்பிட்டுக்கொண்டு உபதேசிக்கிறார். இரண்டாவது ‘வீடு செய்து’ என்பதற்கும் முன் விடச்சொன்னபடி விட்டுத் தீர்ந்ததை அநுவாதம் செய்வதில் நோக்கு. முதலடியில் கூறிபது விடவேண்டியதற்கு வேண்டிய ப்ரயத்நாதிகளை. அந்த ப்ரயத்நங்கள் ஸபலமாகி பூர்ணமான பரித்யாகம் ஸித்தித்திருப்பதை, ‘பரித்யஜ்ய’ என்ற கீதா சரமச்லோகத்தில் அநுவாதம் செய்வதுபோல் இங்கும் அநுவாதம் செய்து அந்தச்லோகத்தையே இந்த ச்லோகம்முழுவதிலும் தமிழ் செய்துகாட்டி விளக்குகிறார். முதலடியில், ஹேயங்களான விஷயங்களையும் தேவதாந்தர சரண்யத்வ புத்தியையும் விடும்படி விதிப்பதில் யாதொரு தோஷத்திற்கும் ப்ரஸக்தியில்லை. வைராக்யமென்னும் ஸாதநம் விதிக்கவேண்டியதே. சாந்தோக்ய பஞ்சாக்நி வித்யையையும், ப்ருஹதாரண்யகத்தில் அதுவிஷயத்திலுள்ளதையும் பற்றிப் பேசுவதால் பஞ்சாக்நி வித்யை யொன்றையேபற்றியது முதல் பாதம்முழுவதும். பஞ்சாக்நி வித்யையில் ‘தஸ்மாஜ்ஜுகுப்ஸேத’ என்று கூறியபடி இப்படி அதில் சொல்லப்பட்ட யாதாயாதங்களை நன்கு அறிந்து அதில் ஜுகுப்ஸை யென்னும் அருவருப்பு பயம் முதலியதால் ஆவிஷ்டனாய் மறுபிறவியென்பதே நேராமற்படி ஸம்ஸார பீஜமான கர்மங்களையும் அஹங்காராவித்யாதிகளையும் அடியோடு தொலைக்கப் பார்க்கவேண்டுமென்பதே உபநிஷத்தின் பஞ்சாக்நிவித்யோபதேசத்தின் கருத்தென்பதை ஆழ்வார் இங்கே விளக்குகிறார்.

‘ஸகிலஸ்தா ஹ்ரவா நஶேஷவ…ஸா:’ என்று பராசரபகவான் அசேஷலோகங்களும் ஜன்மத்தைத் தொலைக்கும்படியான ஸித்தியையருளவேணும், ஸர்வஜனங்களும் முக்திபெற்று வீடுபெறவேணும், அசேஷஜனங்களும் அகாரவாச்யபகவானுக்கு சேஷராகவேணும் என்று ஸர்வமுக்தியை ஆஶாஸித்ததுபோல் உலகமுழுதுமுய்ய ஆழ்வார் ‘க்ஷெஶெஷெஹெவஸிஷ்ஷ’ என்று கூப்பிட்டு உபதேசிக்கிறார். ஒருவர் ஸம்ஸரிப்பது இவ்வாழ்வாருக்கு அஸஹ்யம். பராசரர் க்ரந்த முடிவில் ஆஶாஸநம் பண்ணதை இங்கே ஆழ்வார் முதலிலேயே ஆஶாஸித்து உலகம் முழுவதையும் கூப்பிட்டு அநுஶாஸநம் செய்கிறார். ‘மாறன் இந்த மாநிடத்தோர் தாம் வாழப் பண்புடனே பாடியருள் பத்து’ என்ற அந்தாதி இக்கருத்தை விளக்கிற்று. ‘மின், மின்’ என்று திரும்பவும் திரும்பவும் பாடுவதையும் கவனிக்கவேணும். ‘மின்னின் நிலையில’ என்று மின்னல் என்னும் சஞ்சல வித்யுத்திலும் சஞ்சலமான நிலையுள்ளவை உயிர்கள் பற்றும் சரீரங்

களென்று அடுத்த பாசுரத்தில் பாடப்போவதற்கேற்க 'இதுவெல்லாம் 'மின்'. 'தடித்வஜ்ஜ்வல ஸாயூஜ்யம்' என்கிற கருத்தே நெஞ்சிலுள்ளதால் மின் மின்னே என்ற ஶப்தத்வநி சேரும்படி யிங்கே பாடும் ஸம்ப்ரமம் என்பது ரஸிக்கத்தக்கது. 'உம்முயிர் வீடுடையான்' என்பதற்குப் பலபடியாகப் பொருள்களுரைக்கப்பட்டன. உம்முயிரை — உம் ஆத்மாவை தனக்கு வீடாக-சரீரமாக உடையவன் என்று 'யஸ்யாத்மா ஶரீரம்' என்ற ச்ருதியை அநுஸரித்து ஓர் பொருள். 'ரம்ஹதி ஸம்பரிஷ்வக்த:' என்று இப்பாதத்தின் முதல் ஸூத்ரத்தில் கூறியபடி ஸ்தூலதேஹம் விட்டும், முன் சரீரம் கடந்தும் பூதஸூக்ஷ்மங்களால் அணையப்பட்டு ஜ்ஞாநப்ரஸரமில்லாமல் 'க்ஷேத்ரஜ்ஞா ஜ்ஞாநீஶோரயோதந ஸாத்வேஷ்வேவயோ: | ஶரீரஸ்வபோஷிதோ ஸ்வேச்ச ஸம்பந்தம் வா ஸ்வேச்சயைவ வா ||' என்றபடி இவன் தான் அறியாமலேயே ஸ்வர்க்கத்திலிருந்து விழுந்தபிறகு இவனுக்கு அந்தராத்மாவாயுள்ள பகவானே இவன் பூதஸூக்ஷ்ம சரீரத்தை நிர்வஹித்து நியமித்துக்கொண்டு இவனுக்கு மறுபடியும் முக்திஸாதநாநுஷ்டாநத்திற்காக மனுஷ்யதேஹம் ஸித்திப்பதற்காக விடாமல் கூடவிருந்து செல்வதை, நமது உயிரே அவனுக்குச் சரீரமென்றும் நம்முயிருக்கு வீடான நம்முடைய சரீரமும் ப்ரஹ்மபுரமென்று ச்ருதி பேர் குறித்தபடி அவனுக்கு நிவாஸ்யமும் ஆதரணீயமுமான சரீரமென்பதையும் விளக்குகிறார். உம் உயிருக்கு வீடாகிய உம் சரீரத்திற்கும் அவன் உடையவன் என்பதையும் விளக்குகிறார். சரீரத்தை வீடு 'சரணம்' என்று பற்றுவதைவிட்டு, அவனையே 'சரணம்' 'வீடு' 'ரக்ஷிப்பவன்' என்று ஆச்ரயிக்கவேணுமென்கிறார். 'ஶிஶம்ஶிஶம்வதிகா ஸந்த்ராயதநஶேய்யா' புகுந்து என்ற ச்ருதிப்படி அவனுக்குள் அவனையேவீடாகப்பற்றி 'நிவஸிஷ்யஸி மய்யேவ' என்பதுபோலவும் வாஸுதேவஶப்த நிர்வசநச்லோகத்தில் காட்டியதுபோலவும் அவனுக்குள்ளே ஒடுங்கி நித்யவாஸம் செய்யவேணுமென்பதையும் விளக்குகிறார். 3-வது 'வீடு' க்குஆச்ரயமான இருப்பிடசரீரமென்றும் ஸமர்ப்பிக்கிறதென்கிற விடுகை யென்றும், 'முக்தாநாம் பரமா கதி:' என்றபடி உயிர்களுக்குப் பரமகதியான சாச்வத பரமபதமான மோக்ஷஸ்தாநமென்றும் பொருள்கள். 'உடையான்' என்பதால் அவனே ஸொந்தக்காரரான சேஷி என்பதையும் விளக்குகிறார். 'பொதுவிலே உடையவன் என்கிறார்' என்று ஈடு 'உடையான்' என்பதைத் தனியே எடுத்துக்கொண்டும் பொருளுரைத்தது. முதல்திருவாய்மொழி முதல் பாசுரத்தில் 'உடையவன்' என்பதற்கு அப்படியே தனித்துப் பொருள் கொள்ளவேண்டும் 'நதேவ்ய: பர: ஶேஷீ ஶேஷா நந்யார்ஹ ஸம்ஸிதா:' என்றபடி நம: ஶப்தத்தின் பொருளிலும் ப்ரணவத்தின் பொருளிலுமே இவர் நெஞ்சு செல்லுகிறது. 'நீர் நுமதென்றிவை வேர்முதல் மாய்த்து' என்றவிடத்திலும் 'நாஹம் ந மம' என்ற நம: ஶப்தப்பொருளே. இங்கே 10-ம் பாசுரம் திருவஷ்டாக்ஷரத்தின் அர்த்தமே யென்று ஆழ்வான் முதலியோர் ஸம்ப்ரதாயம். இப்பாசுரத்தின் 4-வது அடியை 'வீடு'-ஸமர்ப்பணத்தை, 'செய்மினே'-செய்யுங்கோள் என்றும், 'வீடு இசைமினே' 'ஸம்மதியுங்கோள்' என்றும் இரண்டுவிதமாகப் பதம்பிரித்துப் பொருள் ஸாதிக்கப்பட்டுள்ளது. 'ஸமர்ப்பணமாவது—இவ்வாத்மா அவனுக்கு சேஷமென்று ஸம்வதிக்கை' என்று திருவாறுயிரம். 'இப்பாசுரத்திலும், இத்திருவாய்மொழியிலும் பக்தியோகத்தை பகவத்வ்யதிரிக்த வைராக்யபூர்வகமாக உபதேசிக்கிறார்' என்று திருவாறுயிரமும், 'இதரவிஷய வைராக்யபூர்வகமாக பகவத்பக்தியைப் பண்ணி ஆச்ரயிங்கோள்' என்று ஈடும் ஸாதித்தன. 'இந்த ஸமர்ப்பணம் பக்தியோகாந்த: ப்ரவிஷ்டம்' என்று திருவாறுயிரத்தின் வ்யாக்யாநமான இருபத்துநாலாயிரம். மூன்றுமத்யாயத்தின் 3-வது பாதத்தின் முடிவில் 'நாநாஶப்தாதி பேதாச்ச' என்றவிடத்தில் ந்யாஸவித்யை ஸூசநம் செய்யப்பட்டதென்பர். ஸூத்ரங்களில் ஸ்பஷ்டமாய் அந்திமதசைவரையில் ஆவ

ருத்திசெய்யும் பக்தியோகத்தையே விஸ்தாரமாகவும் ஸ்பஷ்டமாகவும் விவரித்துள்ளது. ஸூத்ரங்களின் பொருள்களை ஸங்க்ரஹித்துக் காட்டும் இத்திருவாய்மொழியில் அதற்கநுகுணமாக பக்தியோகக்கருத்தை விசேஷமாகக் காட்டப்பட்டதாக நினைக்கலாம். இங்கே ஆத்மஸமர்ப்பணமாகிய ந்யாஸமும் ஸ்பஷ்டமாகக் குறிக்கப்பட்டது. கடைசி அடிக்குப் பொருளாக உரைக்கப்பட்ட சேஷத்வாநுஸந்தாநம் இரண்டிற்கும் பொதுவே. திருவஷ்டாக்ஷரமும் த்வயமும் இரண்டிற்கும் பொதுவே. சரமச்லோகமும் கீதாபாஷ்யத்தின் யோஜனைகளையுத்தேசித்து பக்தியோக விஷயமுமாகும். (தொடரும்)

ஸ்ரீ:

ஸௌஜந்ய பரிமளம்

(10-வது ஸம்புடம் 11-வது ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

(பிராட்டி வைபவம்)

1. பட்டர்

தேவி! ச்ருதிம் பகவதீம் ப்ரவதந்தி வா-
சாம்ஸ: த்வதீயகுணரத்நமணிகோச க்ரு-
ஹம் க்ருணந்தி । தத்த்வாரபாடநப-
டூநி ச ஸேதிஹாஸ ஸங்கீர்ணஸ்ம்ரு-
தி புராணபுரஸ்ஸராணி ॥

ஓ மஹாலக்ஷ்மிதேவி! உன்னுடைய குணங்களாகிற ரத்நங்கள் இருக்கின்றனவே அவைகளை வைத்துக் காப்பாற்றுமிடம் (பொக்கிஷம்) வேதம் என்று முன்னோர்கள் சொல்வர். இதிஹாஸம் புராணம் ஸ்ம்ருதி மீமாம்ஸை இவை அந்த பொக்கிஷஅறையைத் திறப்பதற்கேற்ற திறவுகோல்கள் என்பர்.

ஜநநி விமலசாஸ்த்ராத் ஸித்தபக்த்யஞ்ஜநேந
ச்ருதிசிரஸி நிகூடம் லக்ஷ்மி தே வீக்ஷ-
மாணா: । நிரவதி மஹிமாநம் ஸாதவோ தே
தேவி(தி)யந்த்ர: நநு பவதி தைவீம் ஸம்பதம் தேசிகா: ॥

மனக்கண் ஒன்று உண்டு. அதற்கு பக்தி என்கிற மை போட்டுப் பார்ப்பார்கள். வேதாந்தங்களில் புதைந்துகிடக்கும் புதையல் போன்ற உன் பெருமையைக் காண்பார்கள். கண்டு பரமாநந்தமடைவார்கள். இந்தப் பிறவிப் பயனைப் பெற்றவர்களன்றோ 'பவந்தி ஸம்பதம் தைவீமபிஜாதஸ்ய பாரத' என்று ஸ்ரீக்ருஷ்ணனால் கொண்டாடப்பெற்ற தைவஸம்பத்து வாய்ந்தவர்கள்.

'அஸ்யேசாநா ஜகத' இதி தேவி தே-
ஹ யாம் ஸத்யஜிம் ஸ்ரீ:ஸ்ரீஸூக்தம் ப-
ஹூக்த்யவததே தாம் ச மாதேவமா
பத்நீம் ஷஷ்டி ஸஸ்ரீ ஜகத இதி ய: பௌரு-
ஷே ஸூக்த உக்த: தம் ச த்வத்கம் பதி
மபிதராப்த்யாஸ்ரந்த்வாக: ॥

இவ்வுலகத்தை ஆளுமவள் என்று உன் பெருமையை வேதமோதிற்று. அப்பெருமையை ஸ்ரீஸூக்தம் கிளைக்குமேல் கிளையாக விரியும்படி பலவகையாகக்காட்டிற்று. 'ஸ்ரீஸூக்தத்தில் இப்படிச் சொன்னால் புருஷஸூக்தத்தில் இன்னொருவன் உலகத்திற்கு ஈச்வரன் என்று சொல்லப்பட்டிருக்கிறதே; உலகத்திற்கு இரண்டு ஈச்வரர்களா?' எனில், அங்ஙனமன்று. புருஷஸூக்தத்தில் ஒருவனை லோகேச்வரனாகச்சொன்னது உண்மையே. ஆனால் அவன் உன்பர்த்தாவென்று அடுத்த அநுவாகம் ஓதுகிறதன்றோ? நீங்களிருவருமாகிய தம்பதிகள் லோகேச்வரர்கள். தம்பதிகள் இருவரைக்கொண்டு இரண்டு யஜமானர்களென்று எவரும் சொல்வதில்லை. உத்தமோத்தம தம்பதிகளாகையால் எப்போதும் இருவரிடையே அபிப்ராயபேதமுண்டாவதில்லை. ஆகையால் ஒருவரால் மற்றொருவருடைய ஈச்வரத்வத்திற்குச் சிறிதும்பழுதில்லை.

ப்ரசஸ்த பத்மஜத்யாதிஜா(அ)பரெளஸ்வ -
விஜயப்ரயாப்ரணதவரணப்ரேக்ஷகே-

[illegible]

சக்தி, பலம், தேஜஸ், ஜ்ஞாநம், ஈச்வரத்வம், வீர்யம், சரணாகதியை ஏற்பது, அநுக்ரஹம் செய்வது, வேண்டியதைத்தருவது முதலியன; பரிமளம், காந்தி, லாவண்யம், ப்ரகாசம் முதலியன: இக்குணக்குலங்கள் உனக்கும் எம்பெருமானுக்கும் பொதுவானவை; இருவரிடத்திலுமுள்ளவை.

[illegible]

இன்னும் ஸௌலப்யம் முதலிய குணங்களும் உங்களுக்குப் பொதுவானவை.

[illegible]

முன் சொல்லப்பட்ட ஸௌலப்யம் முதலிய குணங்கள் பொதுவாயிருந்தாலும் பாரதந்த்ர்ய மில்லாமை, சத்ருக்களை ஒழிப்பது, உறுதி முதலிய ஆண்மைக்குரிய குணங்களை எம்பெருமானிடத்திலும், மென்மை, பர்த்தாவுக்கு அதீநமாயிருத்தல், கருணை, பொறுமை முதலிய பெண்மைக்குரிய குணங்களை உன்னிடத்திலும் வைத்து ஆநந்தாநுபவம் செய்வதற்காக உங்களிருவருக்குள் பேதமும் இருக்கின்றது.

இப்படி ஸ்ரீஸ்தவம் என்று பெயரிடாமல் ஸ்ரீகுணரத்நகோசம் என்று பெயரிட்டு, ச்ருதிஸ்ம்ருத்யாதிகள் இக் குணங்களுக்கு ப்ரமாணமென்றும், இப்ரமாணங்களைக்கொண்டு இவைகளை அறிவதற்குப் பெரும் பாக்யம் பெற்றிருக்க வேண்டுமென்றும், அக் குணங்களில் எம்பெருமானுக்கும் பிராட்டிக்கும், இவை பொதுவான குணங்கள், இவை சிறப்பான குணங்கள் என்றும் பட்டர் விளக்கிக் காட்டியிருக்கின்றார்.

2. நஞ்ஜீயர்

'ஸ்ரீஸூக்தபாஷ்யத்திலே பெரிய ஜீயரும் அபேக்ஷிதார்த்தங்களெல்லாம் உபபாதித்தார்' என்று ஸ்ரீ தேசிகன் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்தில் ஸாதித்தபடி பெரியஜீயர் என்கிற நஞ்ஜீயர் தமது ஆசார்யரான பட்டர் காட்டிய வழியையே பின்பற்றி ஸ்ரீஸூக்தபாஷ்யத்தில் ப்ரமாணங்களையும் ந்யாயங்களையும் காட்டிப் பிராட்டியின் பெருமையை ஸ்தாபித்திருக்கிறார்.

[illegible]

என்பது அதில் ஸாரதமமான பாகம். இதன் அர்த்தமாவது:—

இப்படி ச்ருதிஸ்ம்ருதி, ஆகமவசநங்கள் இவைகளால் பிராட்டிக்கு ஸர்வேச்வரத்வம் ஸித்திக்கின்றது. அதாவது:— தன்னிச்சைக்குத் தடையொன்றுமின்றி எல்லாவற்றையும் நியமித்துக்கொண்டிருக்கை. இது தான் எல்லாவற்றினுடையவும் ஸத்தாஸ்திதி ப்ரவ்ருத்திகளுக்கு ப்ரயோஜகமான ஸங்கல்பத்தையுடைத்தாயிருக்கை. எனவே ஸர்வத்துக்கும் காரணமாயும் அந்தர்யாமியாயும் எல்லாம் தன் சரீ

ரமென்னும்படியும் மற்றுமிவ்விதச் சிறப்புடையதொன்ருயுமிருக்கையும் சேர்ந்திருக்கும். இப்படிப் பிராட்டிக்கும் ஸர்வேச்வரத்வ முண்டாஞல் எம்பிரானும் பிராட்டியும் தனித்தனியே ஜகத்ஸ்ருஷ்டி மோக்ஷப்ரதாநம் எல்லாம் செய்யுமோ வென்ற சங்கையைப் பரிஹரிப்பதற்காக ‘ஊஸெூலாநா’ என்ற ச்ருதியில் பத்நீ என்று சொன்னது. எப்படி லோகத்தில் பதிக்கும் பத்நிக்கும் தனித்தனியே யாகாநுஷ்டாந மில்லாமல் சேர்ந்தே நடக்கிறதோ அப்படியே இங்கும் பதிமட்டும் அல்லது பத்நீமட்டும் ஜகத்ஸ்ருஷ்டி மோக்ஷப்ரதாநம் என்றவிதெல்லாம் செய்கிறதென்பதில்லாமல் இருவரும் சேர்ந்தே செய்கிருர்கள் என்றதாகிறது. இதஞல் ஸ்ருஷ்டி முதலிய உலக வ்யாபாரம் யஜ்ஞமென்றும் நிரூபிதமாகிறது என்பது. இப்படி மஹாப்ராஜ்ஞர்களான இவர்கள் பிராட்டிவைபவத்தைச் செவ்வையாக நிரூபித்திருந்தும் சில அம்சங்களில் பக்ஷபேதங்கள் இல்லாமற் போகவில்லை. ஆஞல் இவைகளெல்லாம பகவத்ராமாநுஜ ஸித்தாந்தாவலம்பிகளான நம்மவர்கள் கொண்டவையே. இவற்றில் ஒருபக்ஷத்தை ஸ்தாபிப்பது மற்றபக்ஷங்களை நிரஸிப்பது என்பதில் பல ஸங்கடங்கள் உள்ளன. இவற்றில் தீர்மானமொன்றும் இல்லாதபோதும் வரும் ஹாநி ஒன்றுமில்லை. பிராட்டியை ஆச்ரயிப்பதற்கும் வேண்டிய பலன்களைப் பெறுவதற்கும் இந்த ஸம்சயத்தால் ப்ரதிபந்தமொன்றுமில்லை. வேண்டிய அம்சத்தில் நிச்சயம் இருக்கிறது. ஆகையால் இவ்விதவிஷயங்களில் ஒரு நிர்பந்தத்தை வைத்துக்கொண்டு வ்யர்தமாய் க்லேசப்படவேண்டாமென்று ஸ்ரீ தேசிகன் திருவுள்ளம் என்று தோன்றுகிறது. அதஞல்

ஊஹெஹவம் கூவிஷிஂஹெ தூ
ஸஂஶயெZவீ விவஶ்ஷிதாழ |
உவயாகூதாஂஶவெஶஷ்ாகூ
உபாயஹயஸஹவஂ ||

என்று சதுச்லோகீபாஷ்யத்தில் ஸாதித்ததென்று கொள்ளவேணும்.

ஸ்ரீ:

கோதை தமிழும் கோதாஸ்துதியும்

—O—

‘பரமபதம்ஒருஅணு! திருப்பாவை இரண்டணு’! என்று புத்தகங்கள் விற்கும் ஒருசிறுவன் சென்ற வருஷம் வைகுண்ட எகாதசியன்று திருவல்லிக்கேணித் திருவீதியொன்றில் கூச்சலிட்டுக்கொண்டிருந்தான். அதைக் கேட்ட அடியேனது நண்பர் ஒருவர் அப்படியே நின்றுவிட்டார். என்ன காரணமென்று அடியேன் கேட்கவும், கண்களில் நீர் ததும்ப, தழுதழுத்த குரலில் ‘பரமபதப்பேற்றைக்காட்டிலும் திருப்பாவை அநுபவம் இரண்டுமடங்கு அதிகம் என்று இச் சிறுவன் கூடக் கண்டுகொண்டானென்பதைக் காணவும் எனக்கு ஆநந்தம் மேலிட்டு அடியெடுத்து வைக்க இயலாதிருக்கிறேன்’ என்று பதிலளித்தார் அவர். ‘நின்புகழில் வைகும் தம் சிந்தையிலும் மற்றினிதோ நீயவர்க்கு வைகுந்தமென்றருளும் வான்?’ என்று நம்மாழ்வார் பெரியதிருவந்தாதியில் பெருமாளைக் கேள்வி கேட்டிருப்பது அடியேன் நினைவிற்குவந்தது. ஆழ்வார் அநுபவம் ஒரு புத்தகம் விற்கும் சிறுவனது விளம்பரக்கூச்சலில் மெய்ப்பிக்கப்பட்டது.

*　　*　　*

திருப்பாவை யென்ருல் அருளிச்செய்தவளான ஆண்டாளைச்சொல்லும்; அவள் அத்யத்புதமாகப் புனைந்த பாமாலையாகிய அவள் அருளிச்செயலையும் சொல்லும். எனெனில்— அவளே ஒரு திரு-பாவை அழகியபாவை. பூமாலை சூடிக்கொடுத்த சுடர்க்கொடி. அவள் ப்ரபந்தமும் ஒரு திருப்பாவை; அவள் இன்னிசையால் பாடிக்கொடுத்த நற்பாமாலை. அவள் பூமாலையாலும் பாமாலையாலும் சட்

டுண்டுதானே ஸர்வேச்வரன் நமக்கின்று அருளாளனாக விளங்குகிறான்! இது தேசிகோத்தமன் காட்டிக்கொடுக்கும் பெருமை. 'அஸ்மாத்ருசாம்' என்று தொடங்கும் கோதாஸ்துதி ச்லோகத்தில் 'தாயே! உனது மௌலியிற் புனைந்த பூமாலையும், முன்னல்யாழ் பயில் நூல் நரம்பின் முதிர் சுவையை வென்ற மாதுர்யத்தையுடைய சொற்களின் வரிசைகளாலான பாமாலையும் நியமிக்க, அனைவரையும் நியமிக்குமிறைவனுமிம் முகுந்தன் நெடுங்காலமாகப் பாவமே செய்த பாவியேம் திறத்திலும் ரக்ஷணம் பயக்கிறான் இது நிச்சயம்' என்று அந்த ச்லோகத்தின் திரண்ட பொருள். பூமாலையால் திருமேனியைக் கட்டிப் பாமாலையால் திருவுள்ளத்தை வசப்படுத்தி விட்டாள்போலும். ஆகவே அவளிட்ட வழக்காகி நமக்கு அருள் வழங்குகிறான்.

* * *

உலகமனைத்தும் ஸ்ரீமத் ராமாயணத்தின் இன்பத்தை அப்பொழுதைக் கப்பொழுது ஆராவமுதாக நுகர்ந்து வருகிறது இன்றளவும். அப்படியிருக்க திருப்பாவையின் அநுபவம் மேலும் வளர்ந்துவருவதில் என்ன வியப்பு? என்று கேட்கிறார் நம் கவிகதக கண்டீரவ குரு. வல்மீகம் என்றால் புற்று. அதில் தோன்றியமையால் அவருக்கு வால்மீகி என்ற பெயர் ஏற்பட்டது. புற்று என்பது பூமிக்குக் காது என்று சொல்வது வழக்கம். கேட்கும் தொழிலையுடைய காதுக்கு உவமை கொண்ட புற்றில் தோன்றியவரே ஒரு கவி ஸார்வபௌமன் என்று கொண்டாடப்படும் போது பூமிதேவியின் முகாரவிந்தத்திலிருந்து வெளிவந்த பிரபந்தங்கள் எவ்வளவுதான் இனிமையாயிருக்கமாட்டா? கோதை பூமி தேவியின் அவதாரம். ஆகவே இவள் திருவாக்கிலிருந்து வெளிவந்த திவ்யபிரபந்தம் இன்பத்தின் எல்லையைத் தொடுகிறது என்பதில் அதிசயமில்லை. இவள் வாக்காகிய ஸரஸ்வதி க்ருஷ்ணஸம்பந்தத்தால் யமுனையாகிவிடுகிறது. ஸரஸ்வதி, யமுனை, இரண்டு ஆறுகளின் பெயர்கள்.

* * *

கோதைபிறந்தபின் உலகத்தில்நிகழ்ந்த ஆச்சர்யஸம்பவங்களுக்கு ஒரு எல்லையுண்டோ? தெற்கு திக்கே வடக்கு திக்காகப்போயிற்றே என்றும் ஸ்வாமி தேசிகன் வெகு அழகாக உத்ப்ரேக்ஷிக்கிறார். அழகியமணவாளன் திருவரங்கப்பெருநகருள் தென் திசைநோக்கிப் பள்ளிகொண்டிருப்பது ப்ரஸித்தமிறே. அவர் நோக்கும் திக்கு தெற்கு-தக்ஷிணம்-ஆயினும் நாச்சியார் ஸ்ரீவில்லிபுத்தூரில் அவதரித்ததும் அந்தத்திக்கில் அவதரித்தது காரணமாக அந்தத் திக்கில் அரங்கநகரப்பன் கடாக்ஷங்கள் அபிமானத்துடன் ப்ரஸரிக்கின்றன. ஆகவே அந்த திவ்யகடாக்ஷங்களைப் பெற்றமையால் அது ஸர்வோத்தரமாக விளங்குகிறது. 'உத்தரம்' என்றால் வடமொழியில் உயர்ந்தது என்று பொருள். வடக்கு என்றும் பொருள். 'திக் தக்ஷிணாபி...ஸர்வோத்தரா பவதி' தெற்காயிருந்தாலும் எல்லாவற்றிற்கும் வடக்காக (உயர்ந்ததாக) விளங்குகிறது என்று சிலேடைப்பொருள். 'தென்திசை இலங்கை நோக்கி' என்ற தொண்டரடிப்பொடிகள் அநுஸந்தித்ததை 'தென் திசையில் நங்கை நோக்கி' என்று உத்ப்ரேக்ஷிக்கிறார் கவிப்பெருமான் தேசிகன்.

* * *

'தாயைக்கொள்ளும் பிள்ளை' என்று தமிழில் ஓர் பழமொழி. 'பெண்ணைக்கொள்ளும் தகப்பன்' என்று ஆண்டாளவதரித்த பின்னர் தேசிகன் கண்டெடுத்த புதுமொழி. 'கோதாய்! உன்னைப்போல் உன் கொழுநனாகிய எம்பெருமானை அநுபவிக்கப் பாரித்த உன் தகப்பன்மார்கள் (ஆழ்வார்களைச் சொல்லியபடி) தங்கள் பக்தியை ச்ருங்காரமாக ஆக்கி, உன்னைப் பின்பற்றி விரஹப் பேச்சுக்கள் முதலிய ச்ருங்காரப் பேச்சுக்களாலே பெருமாளுடைய ஹ்ருதயத்தை ரஞ்ஜிப்பிக்கிறார்கள்.' 'மாற்பால் மனஞ்சுழிப்ப மங்கையர்தோள் கைவிட்டு' என்று உபதேசித்தபேர்களெல்லாம் ஆண்டாள் போக்கைக்கண்டு வியந்து அதனையே பின்பற்ற ஆவல்கொண்டு மங்கையர் பேச்சும் செய்கையும் மேற்கொள்ளுகிறார்கள். இவளது ச்ருங்காரமே பக்தி. அவர்கள் பக்தியை ச்ருங்காரமாக மாற்றவேண்டியிருக்கிறது ஸாவபந்தத்தின் பெருக்காலே. இவள் 'மற்றை நங்

காமங்கள் மாற்று' என்றால் அவர்கள் 'பக்தியைக் காமங்களாக மாற்று' என்பார்கள். 'கண்ணனுக்கே யாமது காமம்' அன்றோ!

* * *

ஆழ்வார்கள் உபயவேதாந்தஸித்தாந்த ப்ரவர்த்தகர்கள் அவர்கள் மகிழ்ந்துபாடும் செய்ய தமிழ்மாலைகளைத் தெளியவோதி நாம் தெளியாத மறைநிலங்கள் தெளிகின்றோம். ஆண்டாளோ உபயவேதாந்த ஐககண்ட்யத்தைத் தன் திருநாமத்தாலே செய்து காட்டுகிறாள். 'கோதா' என்று வடமொழியிலும் 'கோதை' என்று தமிழ்மொழியிலும் அவளுக்குப் பெயர். வடமொழிச் சொல்லுக்கு வாக்கையளிப்பவள் என்றும் தமிழ்ச் சொல்லுக்கு பூமாலை யென்றும் பொருள். வாக்காகிய பாமாலையும் பூமாலையும் சேர்த்து இவள் பெருமாள் திறத்துப் புனைந்ததுபோல் வடமொழி வேதாந்தமும் தமிழ் மறையும் ஒரே திருமாலைத் தம் அநுபவத்திற்கு விஷயமாக ஆக்கியுள்ளன என்ற தத்வத்திற்கு இவள் திருநாமம் ஒரு ஞாபகக்குறிபோலும். உபயவேதாந்தத்துக்கும் உத்தேச்யனாயிருக்கச் செய்தேயும் எம்பெருமான் தமிழ்மறைக்கு ஒரு ஏற்றம் காட்டிக்கொடுக்கிறான் தனது செயலாலே. திருவடிகளில் நிகமங்களின் பரிமளம் வீசநிற்கும் இறைவன் ஸர்வகந்தனாயிருக்கச் செய்தேயும் தனது திருமுடியால் ஏற்பது வேறு ஒரு ஆமோதத்தை (ஆநந்தத்தை; பரிமளத்தை) அதுதான் ஆண்டாளது மணந்தரு மின்னிசை மிளிரும் மாலை— பூமாலையும் பாமாலையும் சேர.

* * *

ஸ்வாமி தேசிகனுக்கு முற்பட்டபேர்களெல்லாம் ஒரு பூமாலையைத்தான் பாடிப் புகழ்ந்தார்கள். அதாவது: ஆண்டாள் சூடிக்கொடுத்த பூமாலையை. தேசிகன் வேறொரு பூமாலையையும் நாச்சியார் சூட்டினதாகப் பாடுகிறார். 'உனது மாலையின் ஸம்பந்தத்தால் தந்யமான ஸகல ஜகத்துக்கும் பிதாவினுடைய சிரஸில், மீண்டும், தாயே! நீ உனது பஹுமானமும் ப்ரீதியும் நிறைந்த திருக்கண்களினின்றும் சற்றுக் கோணலாக வெளிப்படும் இன்பப் பார்வைகளாலே ஒரு நீலோத்பலமாலையைச் சாற்றுகிறாய்.' இது இவள் கடாக்ஷமாலை. இதற்குப் பதில் அவன் கடாக்ஷமாலை இவள் பேரில். இந்த மாலை மாற்றுதலை அருகிருந்து அநுபவிக்கும் ரஸிகர்கள் அவ்விருகடாக்ஷங்கள் விஷயமாக, ஒன்று குறைவு, ஒன்று மேல், அல்லது இரண்டும் ஸமம், என்ற விவாதங்களைக் கிளப்பி அந்த ரஸோக்திகளாலே மூன்று லோகத்தையும் நிரப்பிவிடுகிறார்களாம். இது தேசிகன் அமைக்கும் மாலைமாற்று ச்லோகம், கோதாஸ்துதியில் சித்தரித்துக் காட்டப்பட்டிருக்கிறது. இரண்டு கடாக்ஷங்களும் ஸமம் என்ற கக்ஷி தமதென்று விளங்க ச்லோகம் அமைந்திருப்பது கவனிக்கத்தக்கது. 'ஸமவதி யசோவாம் ஸம்வதீ தைவதம் ந:' என்று முடிவு கட்டிய மஹாபுருஷனல்லவோ!

* * *

இங்ஙனம் கோதை தமிழையும் கோதாஸ்துதியையும் விஸ்தாரமாக அநுபவிக்க நமக்கோர் விதி வாய்த்தது மதிநிறைந்த மார்கழிமாதம் மறுபடியொருமுறை மீண்டதாலே. இந்த பாக்கியம் இம்மாதத்திற்கேயுளது என உணர்ந்த ஸர்வஜ்ஞன் 'மாஸாநாம் மார்கசீர்ஷோஹம்' என்று பாடியிருப்பதில் என்ன வியப்பு. பரமரஸிகனல்லவோ அவன்!

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா முன் வருஷங்களின் ஸஞ்சிகைகள்

ஸ்ரீந்ருஸிம்ஹ ப்ரியாவின் சென்ற ஸம்புடங்களின் ஸஞ்சிகைகளில்கீழ் குறிக்கப்பட்ட ஸஞ்சிகைகள் சிலவாகிவிட்டதால் அவைகள் தவிர மற்ற ஸஞ்சிகைகள் ஸ்வல்ப ப்ரதிகளே கைவசமிருக்கின்றன. அபேக்ஷையுள்ளவர்கள் உடனே எழுதி தருவித்துக்கொள்ளவேண்டுமென்று ப்ரார்த்திக்கிறோம். ஒரு ஸஞ்சிகையின் விலை அணா 4.

கைவசமில்லாத ஸஞ்சிகைகளின் விவரம்.

ஸம்புடம்	1	4	7	8	9
ஸஞ்சிகை	3	5,6,7	11 12	1	2

ஸ்ரீ:

பீஷ்மாச்ரம தத்வம்

'அந்தரா சாபி து தத்த்ருஷ்டே:' என்கிற ஸ்ரீபாஷ்யத்தில் பீஷ்மாசார்யரையும் ரைக்வ ஸம்வர்த்தர்களுடைய மத்தியில் அநாச்ரமியாகத் திருவுள்ளம் பற்றி உதாஹரித்திருப்பதால் இவர் அநாச்ரமி என்பதுதான் தத்வம்.

'ஆச்ரமமிருந்தாலும் இவர் ஊர்த்வரேதஸ்த்வ ப்ரதிஜ்ஞையால் ஸ்த்ரீஸங்கரஹிதராய் இருப்பதால் ப்ரஜோத்பாதநம் இல்லை. ஆகையால் க்ருஹஸ்தாச்ரமதர்மம் புஷ்கலமாக இல்லாததால் அநாச்ரமி என்று எடுத்தது' என்று ஸமாதானம்சொல்வது யுக்தமன்று. பாஷ்யாதிகரணஸாராவளிசிந்தாமணிகளில் அநாச்ரமித்வம் கண்டோக்தமாயிருப்பதால் இப்படி ஸமாதானம் சொல்லுவது க்லிஷ்டநிர்வாஹமாகும்.

பாரதாதிகளில் எங்கும் இவர்விவாஹம் பண்ணிக்கொண்டதாக வசநமுமில்லை. மேலும் அம்போபாக்யாநத்தில் 'விவாஹவிமுகோऽபவத்' 'நிவ்ருத்ததாரகர்மணி' என்கிறவசநங்களால் விவாஹமில்லை என்கிறதற்கு ஸம்வாதமிருக்கிறது. அம்பாவிவாஹவைமுக்யமாத்ரம் இங்கு விவக்ஷிதமாகில், 'விமுகோऽஸ்மி' என்று வர்த்தமாந ப்ரயோகமிருக்கவேணும். 'அபவம்' என்று பூதகாலநிர்த்தேசத்தால் முன்பே நிவ்ருத்தர் என்று ஏற்படுகிறது. ஆனாலும் ஊர்த்வரேதஸ்த்வ ப்ரதிஜ்ஞாப்ரப்ருதி என்று தாத்பர்யமாகலாமே என்னவொண்ணாது. அப்படியானால் 'ஸ்த்ரீஸங்கவிமுகோऽபவம்' என்று சொல்வது உசிதம். அதினாலேயே இவருடைய ஸ்வவிவாஹப்ரத்யாசை அவளுக்கு நிவர்த்திக்கும். இவருடைய தர்மாநுஷ்டாநார்த்தமன்றிறே அவள் இவரைத் தன்னை விவாஹம்பண்ணிக் கொள்ளும்படி வேண்டுவது. கிந்து போகாசையாலே.

கிஞ்ச இவர் க்ருஹஸ்தராய் இருந்துகொண்டு தாசராஜனுக்கு 'இனிமேல் ஸ்த்ரீஸங்கம் பண்ணக்கடவேனல்லேன்' என்று ப்ரதிஜ்ஞை பண்ணி இருந்தாராகில் இதற்குமுன் கர்பாதாநம் பண்ணியிருந்து புத்ரன் ஜநித்தால் என் செய்வது என்று அவனுக்கு சங்கை உண்டாகக் கூடும். அதற்காக 'இதற்குமுன்பும் எனக்கு ஸ்த்ரீஸங்கமில்லை' என்றும் ப்ரதிஜ்ஞையில் சேர்த்திருக்கவேண்டும். அதைக் காண்கிறிலோம். ஆகையால் ஸமாவ்ருத்தராய் யௌவராஜ்யத்தில் இருந்துகொண்டிருக்க தம் விவாஹத்திற்கு ப்ரயத்நப்படுவதற்கு முன்பே பித்ருமநோரதபூர்த்திக்காக இந்த ப்ரதிஜ்ஞை ஸம்பவித்ததால் பின்பு, தர்மாநுஷ்டாநமாத்ரத்திற்காக விவாஹம் சாஸ்த்ராநுமதமன்றாதலால் ஸங்கடவிஷயத்தில் இவர் அநாச்ரமியாகவே நின்றுவிட்டார்.

ஆனால் கண்ணன் இவரை பீஷ்மபர்வத்தில் யுத்தோத்யோக ப்ரகரணத்தில் முன்னூறு அச்வமேதங்களைச் செய்தவர் என்று தர்மபுத்ராதிகளிடத்தில் ப்ரசம்ஸிப்பது எப்படி ஸங்கதமாகும்? பத்நீ இல்லாமல் யாகாதிகாரமுண்டோ? என்னில், அது அந்யதா நேயம். அது எங்ஙனே என்னில்:—'த்யக்த்வா புத்ராம்ஶ்ச தாராம்ஶ்ச ராகவம் ஶரணம் கத:' 'பவத்கதம் மே ராஜ்யஞ்ச' என்கிற விபீஷணாழ்வானைப்பற்றி சக்ரவர்த்தித் திருமகன் 'ராஜ்யாகாங்க்ஷீ ச ராக்ஷஸ:' என்று அருளிச்செய்ததை அந்தரங்கபஹிரங்க ந்யாயத்தைக்காட்டி பெருமாள் பாசுரத்தை அந்யதா நயிப்பித்ததை ஸ்ரீ அபயப்ரதான ஸாரத்திலே காண்கிறோமிறே. அப்படியே 'விவாஹ விமுக:' என்கிற தன்னுடைய வாக்யத்துடன் கண்ணனுடைய ப்ரசம்ஸாவாக்யம் விரோதித்தால், பிறர் பாசுரத்திற்குத் தன்னுடைய வாக்யவிரோதம் வாராதபடி தாத்பர்யம் கொள்கைதான் நிபுணக்ருத்யம். பாவமென்னென்னில்.-(1)கோடி கங்கா தாநம் போல் த்ரிசதாச்வமேதபலதாயி ஹிரண்யதாநம் பண்ணினவர் என்று கொள்ளலாம். எங்கெந்த ஸுக்ருதத்தில் எவன் அசக்தனோ அவன் ஹிரண்யதாநத்தால் அந்தந்த பலத்தைப் பெறுகிறான் என்று இந்த பீஷ்மாசார்யரே ஆநுசாஸநிகபர்வத்தில் ஹிரண்யதாநபல ப்ரகரணத்தில்உபதேசித்ததைக் காண்கிறோம். (2)[illegible] யஜ்ஞத்தில் அநதிக்ருதரானாலும்

உத்ஸவாவப்ருதஸ்நாநம்போல் த்ரிஶதாச்வமேதாவப்ருதஸ்நாயீ என்றும் சொல்லலாம். (3) யதா பிதாவிற்கு த்ரிஶதாச்வமேதத்தை நடத்திவைத்திருந்து அதனால் ப்ரயோஜககர்த்தாவான இவரை ‘க்ருஹபதி:’ என்று நிர்தேசிக்கலாம். ‘[illegible]’ என்று ஜீவ பரமாத்மாக்கள் இருவரையும் ச்ருதி சொல்லிற்றிறே. (4) [illegible] வஸுபதப்ராபக ஜந்மாந்தரத்தில் அநுஷ்டித்த ஸுக்ருதரூப அச்வமேதங்களைக் கொண்டு இப்போது இவரை ப்ரஶம்ஸிக்கை உபபந்நதமம். இந்த்ரபதம் பெற்றபின்பும் இந்த்ரனை ஶசீவன் என்கிறாப்போல் வஸுபதம் பெற்றபின்பும் தந்மூலஸுக்ருதத்தை யிட்டு வ்யபதேசிக்கக் குறையில்லை. ஆனால் இப்போது இவர் வஸுவோ? என்னில் ‘[illegible]’ என்கிறபடியே வஸுவாக இருந்தவருக்கு மத்யே சாபவிசேஷத்தால் மநுஷ்யஜந்மம் வந்தாலும் மறுபடியும் வஸுபதத்தை அடைந்தே ப்ராரப்தசேஷத்தை அநுபவித்து தீர்க்கவேண்டியிருப்பதால் பீஷ்மநாமாவஸ்தையிலும் அந்த ஸுக்ருதசேஷம் இவரிடத்திலிருப்பதால் அதையிட்டு ப்ரசம்ஸிக்கத்தகுமிறே.

ஆகிலும் இவருடைய சரமதசையில் யுதிஷ்டிரர் ‘[illegible]’ என்றும், பீஷ்மருடன் ‘[illegible]’ என்றும் சொல்வது எப்படிப்பொருந்தும்? அக்நிகள் என்று பஹுவசநத்தால் கார்ஹபத்யாத்யக்நித்ரயமன்றோ இங்கு விவக்ஷிதம்? பீஷ்மர் அபத்நீகரானால் அநக்நிகரான இவருக்கு அக்நித்ரயத்திற்கு எப்படி ப்ரஸக்தி என்னில்? அதிலும் விரோதமில்லை. அபத்நீகனுக்கு உத்தபநாக்நிஸம்ஸ்காரம் விஹிதமாகையால் அந்த அக்நியைத்தானிங்கு சொன்னது. ‘[illegible] உத்தபநாக்நி:’ என்று பரிபாஷிதமாகையால் முஷ்டிதர்பங்களால் மூன்று தடவை உண்டுபண்ணப்பட்டது என்கையை பஹுவசநம் ஸூசிப்பிக்கிறது. ச்ரௌதாக்நிகளைச் சொன்னதாக வைத்துக்கொண்டால் யஜமாநபத்நியையும், யஜ்ஞபாத்ரங்களையும் இங்கு அவச்யம் சொல்லியிருக்கவேணும். விபீஷணாழ்வான் ராமனின் நியமநத்தின்பேரில் ராவணனுக்கு ஸம்ஸ்காரம் செய்ததைச் சொல்லுகிற இடத்தில் யஜ்ஞபாத்ரங்கள் சொல்லப்படக் காண்கிறோம்.

ஆகையால் இப்படி அந்யதாஸித்தஹேதுக்களால் ஸ்ரீபாஷ்யாதிஸூக்திகளை அந்யதா நயிப்பது ந்யாய்யமாகாது.

இதில் உதாஹரிக்கப்பட்ட மூவரும் ஆச்ரமிகள்தான். ஆனால் தன்னுடைய தர்மங்களைப் புஷ்கலமாக அநுஷ்டிக்க ஸௌகர்யமில்லாதவர்கள் என்று ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியாவில் ஒரு வித்வானுடைய அபிப்ராயம் காணப்படுகிறது. இதை மறுத்து, பீஷ்மர் அநாச்ரமிதான் என்று தாம் அங்கீகரிக்கச் செய்தேயும் பாவப்ரகாசிகையில் அக்நீந்தநாத்யதிசரணத்தில் ‘பீஷ்மாசார்யர் க்ருஹஸ்தரே; யஜ்ஞாதிகளை அநுஷ்டித்தவரே’ என்று அபிப்ராயப்பட்டு உபநிஷத்பாஷ்யகாரர் சொல்லியிருப்பது ப்ராமாதிகம் என்று அதற்குச் சில உதாஹரணங்களையும் காட்டி மற்றொரு வித்வானின் அபிப்ராயம் காண்கிறது. அதில் முதல்வருடைய ஸித்தாந்தத்தைக் கொஞ்சம் சர்ச்சித்துவிட்டு பின்பு மற்றவரின் அபிப்ராயத்தை விமர்சிப்போம்.

அதில் பீஷ்மருக்கு கார்ஹஸ்த்யத்தை அங்கீகரித்து ஸ்ரீபாஷ்யகார தேசிக குமார ப்ரப்ருதிகளுடைய கண்டோக்திகளுக்கு அந்யதாபாவ வர்ணனம் பண்ணுவது ‘[illegible]’. இதில் எடுக்கப்பட்ட ரைக்வர் ப்ரஹ்மசாரியாக வித்யாநுஷ்டானம் பண்ணிக்கொண்டு இருந்து ஜாநச்ருதியினுடைய பெண்ணை உத்வஹித்து க்ருஹஸ்தரானார் என்று காணப்படுகிறது. நான்கு ஆச்ரமத்திலும் ப்ரஹ்மவித்யாதிகாரமிருக்க இந்த ரைக்வருக்கு ப்ரஹ்மசர்யத்திலா அல்லது கார்ஹஸ்த்யத்திலேயா அநாச்ரமித்வசங்கை? முதல்பக்ஷத்தில் இவருக்கு ஸமிதாதாநாசக்தியா? பிக்ஷாசரணாசக்தியா? எக்காரணத்தால் புஷ்கல ஆச்ரமதர்மமில்லை? பிக்ஷாசரணமில்லையென்றால் பலாஹாரமும் பிக்ஷாதுல்யம்தான். தன்னுடைய க்ருஹபோஜநமில்லை. ஸமிதாதாநம் வநவாஸிகளுக்கு மிகவும் ஸுலபம்.

க்ருஹஸ்தாச்ரமத்தில் யஜ்ஞாநுஷ்டாநாசக்தர் ஆகையால் சங்கை என்னில், தனக்கு அசக்யமான தர்மஸ்தானத்தில் அங்கப்ரபத்திவசீக்ருத ஈச்வரன் நின்று தத்ஸாத்குண்யரூப

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

[ஸ்ரீ. உப. வித்வான், திருவரங்கம், திருமலைதாதாசார்ய ஸ்வாமி, M. O. L. திருப்பதி.]

ஐச்வர்யம்

(பூர்வபக்ஷம்)

'யேந ஸூக்ஷ்மசித்கம் லக்ஷ்ம்யா: ஸ்வரூபம் தத்வஸஜ்ஞ்ஹே' என்றபடி பெரியபிராட்டியின் ஸ்ரூப ஸ்வபாவாதிகளை தத்பரமாய் நிரூபிப்பதற்காக வந்த தனது தத்வஸங்க்ரஹ க்ரந்தத்தில் நாயனாராச்சான்பிள்ளை ப்ரதிபாதிப்பதாவது-

'ப்ரமாணங்களுக்கு விஷயமான வஸ்துக்கள் அசைப் போக்தா போக்யம் நியந்தாவென்ற சொல்லுகிற மூன்றுகோடியிலும் அந்தர்பூதம்............

இப்படி ஆத்மாக்களுடைய ஸ்வரூபம் அணுவாயிருக்குமாகில் 'யதா ஸர்வகதோ விஷ்ணு:' என்று யாதொருபடி அவன் ஸர்வகதனாயிருக்கிறான் அப்படி இவளும் ஸர்வகதையா யிருக்குமென்று ஈச்வரனோபாதி வ்யாப்தி சொல்லாநின்ற தெங்ஙனேயென்னில்?

இவள் ஆத்மஜாத்யந்தர்பூதையல்லள் என்று சிலர் உத்தரம் சொல்லுவார்கள். அது அயுக்தம்.

அப்படி ஈச்வரகோடியிலும் அந்தர்பாவமில்லை. ஈச்வரத்வம் இரண்டாச்ரயத்தில் கிடவாமையாலே. இது இரண்டாச்ரயத்தில் கிடக்குமாகில் அந்யோந்யம் ஆஜ்ஞாபங்கம் பிறக்கையாலே இருவருக்கும் ஈச்வரத்வம் குலையும். ஆகை (யாலே?) இறே 'ஏகஸ்மிந் தேவ வசக:' என்று ச்ருதி சொல்லிற்று.

அப்படியே காரணத்வமும் இவளுக்கில்லை. அதில் நிமித்தோபாதாநங்கள் இரண்டும் இவளென்னவொண்ணாது... ... ... இரண்டும் ஈச்வரனே என்று சொல்லுகையாலே.

இவள் உபகரணபூதையென்னவொண்ணாது. அப்படியே உபாதாநரூப ஸஹகாரியுமல்லள். அப்படி நிமித்தஸஹகாரியுமல்லள்.

அதில் தர்மிக்ராஹக ப்ரமாணத்தாலே இவளுக்குக் காரணத்வமென்னவொண்ணாதே. இப்படி இவள் ஸ்ரூபத்தைக் காட்டுவதொரு ப்ரமாணமில்லாமையாலே. அந்வயவ்யதிரேகங்களாலே காரணத்வமென்னவொண்ணாதே. இவள் ஸங்கல்பத்தையொழியவே ஜகத்து உண்டாகிறதாகையாலே. அநுபபத்தியாலே காரணத்வமென்னவொண்ணாதே. இவள் கூடாதபோது ஜகத்து உத்பந்நமாகாதென்கைக்கு ஒன்றும் காணாமையாலே. வசநபலத்தாலே காரணத்வமென்னவொண்ணாதே. அப்படிக்கொரு வசநமில்லாமையாலே. ஆகையாலே இந்நான்குமிவள்பக்கலில்லாமையாலே இவளுக்குக் காரணத்வம் ப்ரஸங்கமே பிடித்தில்லை.

இந்த காரணத்வாபாவத்தாலே உபாயத்வாபாவமும் சொல்லுகிறதாயிற்று.

ஏவமாதி வாக்யங்கள் ஸர்வகாரணவஸ்துவுக்கே உபாயத்வ காரணத்வாதிகளை ஓதிப் போருகையாலே இவள் உபாயபூதையென்னவொண்ணாது.

இவளுக்கு உபாயபாவத்தில் சங்கைக்குக்கூட யோக்யதை இல்லை.

ஆகையாலே ஈச்வரகோடிகடிதை யென்னவொண்ணாது.

'யதா ஸர்வகதோ விஷ்ணு: ததைவேயம் த்விஜோத்தம' என்று ஈச்வரனோபாதி ஸர்வகதை யென்றும் 'ஈச்வரீம் ஸர்வபூதாநாம்' என்று ஸர்வபூதங்களுக்கு ஈச்வரி என்றும் இவளும் சொல்லப்படாநின்றாளே என்னில், இது புராணஜ்ஞரல்லாதவர்கள் சொல்லும் வார்த்தையிறே. முந்துற்றமுன்னம் வ்யாபகத்வம் இவளுக்கில்லை. அப்படியே வைஜாத்யஹேதுவான ஈச்வரத்வம் யாதொன்று அந்த ஈச்வரத்வம் இவளுக்கில்லை... ...

இந்த ஈச்வரத்வம் ஸ்வாபாவிகமா?

ஔபாதிகமா? என்ருல் முந்துறமுன்னம் ஸ்வாபாவிகமாகமாட்டாது. ஜகத்துக்கும் ஈச்வரன் பலராய்வந்து விழுகையாலே. பலருண்டென்னவொண்ணுதே. 'ஏகஏவ தேவ வாசு:' இத்யாதிகளில் ஒருவனே என்கிற அவதாரணத்திற்கு விரோதம் பிறக்கையாலே.

இனி பத்நீபாவத்தாலே என்னும் மது ஸ்வீகரிக்கப்படுகிறது. அப்படிக்கு 'அஸ்யேசாநா ஜகதோ விஷ்ணுபத்நீ' என்று விஷ்ணுபத்நியாகையாலே ஜகத்துக்கு ஈசானையாயிருக்குமென்று சொல்லிற்று. பத்நீபாவத்தாலேயாகில் பத்ந்யந்தரங்களுக்கும் வாராதோவென்னில் அவர்களுக்கும் ஈச்வரத்வாகாரத்தில்(?)விரோதமில்லாமையாலே இது அநிஷ்டமன்று. ஈச்வரத்வம் ஔபாதிகமென்று கொண்டாலும் ஈச்வரன் ஒருவனே யென்கிற அவதாரணத்திற்கு விரோதம் வாராதோவென்னில்? வாராது. பத்நீநியமநம் பர்த்தாவின் ஹ்ருதயத்தைப் பின்சென்றல்லது இராமையாலே. பின்செல்லாதாகில் பத்நீத்வம் தானன்றியிலே யொழியும்.

அப்படியே அநந்த கருடாதிகள் உமக்கு சயந வாஹநாதிபூதர்களாய் இருப்பர்களென்று இவளை ஸ்தோத்ரம்பண்ணுகிற ஸ்ரீ ஆளவந்தார் இவளைப்பற்ற அவர்களுக்கு சயநவாஹநாதிபாவத்தில் ப்ரஸக்தியில்லாமையாலே அவ்வாகாரமுண்டாகைக்காக 'காந்தஸ்தே புருஷோத்தம:' என்று ப்ரதமத்திலே பத்நீத்வத்தைச் சொல்லி அநந்தரம் 'பணிபதி: சய்யாஸநம் வாஹநம் வேதாத்மா விஹகேச்வர:' என்று தொடங்கி ஸ்தோத்ரம் பண்ணினாரிறே: புருஷோத்தமன் உமக்குக் காந்தனுகையாலே அவனுக்கு சயந வாஹநாதிபூதரான அநந்த கருடாதிகள் உமக்கும் சயந வாஹநாதிபூதர்களாயிருக்குமென்றபடி.

பகவத்விஷயத்தையொழிந்த அல்லாத விஷயத்தில் ஆத்மாக்களுக்குண்டான சேஷத்வம் ஔபாதிகமென்று நினைத்தன்றோ 'தாஸபூதா: ஸ்வத: ஸர்வே ஹ்யாத்மாந: பரமாத்மந:' என்று ஸர்வாத்மாக்களும் பரமாத்மாவைப்பற்ற, ஸ்வாபாவிக சேஷபூதரென்று விசேஷித்தது.

ஆக வைஜாத்யஹேதுவான வ்யாபகத்வேச்வரத்வங்கள் ஈச்வரன்பக்கல்போலே இவள்பக்கலில்லாமையாலே இவள் ஆத்மஜாத்யந்தர்பூதையல்லளென்கை அயுக்தம்.

அவர்களைக்காட்டில் இவளுக்கு எத்தாலே ஆதிக்யமென்னில் மஹிஷீபாவம் ஆநுரூப்யம் போக்யதோத்கர்ஷம்.........தொடக்கமான விசேஷங்கள் இவளுக்கே உள்ளதொன்ருகையாலே.

இவ்விசேஷங்களுண்டாயிருக்க, ஆத்மாக்கள் ஸம ஸ்வரூபனென்பானென்னில்:— நிஷ்க்ருஷ்டஸ்வரூபத்தில் வைஷம்யமில்லாமையாலும், இவ் வைஷம்யங்கள் விக்ரஹவிசேஷ ப்ரயுக்தங்களாகையாலும் ப்ரக்ருதி ஸம்ச்லேஷவிசேஷப்ரயுக்தங்களாய் வருகிறதாகையால் ஒரு விரோதமுமில்லே.

அர்த்தகதி இதுவாயிருக்க இத்தை அநாதரித்து இவள் ஈச்வரனேடொக்குமென்றும் ஈச்வரனுமிவளும் ஒன்றென்றும் ஈச்வரனைக் காட்டில் அதிகையாயிருக்குமென்றும் அவளுக்குப் பத்நியாயிருக்குமாகாரம் தன்னிச்சையாலேயென்றும் இவ்வோ அர்த்தங்களை ப்ரமாணஸித்தமுமன்றியிலே ஸம்ப்ரதாய ஸித்தமுமன்றியிலேயிருக்க யாவர் சிலர் ரஹஸ்யரூபேண உபதேசித்து ஜகத்தை மோஹிப்பித்தார்கள். ஸகல சிதசித்விலக்ஷணமாய் நிகில ஜகதேககாரணமாய் நிரஸ்த ஸமஸ்தஸமாப்யதிகவஸ்துஜாதமாய்(?) நாராயணசப்தவாச்யமான பரப்ரஹ்மமே ஸகல வேதாந்தவேத்யமென்று ப்ரஹ்மமீமாம்ஸகர் (?) ஸூத்ரந்யாயத்தாலே அறுதியிடுமவர்களாய் வேதவிதக்ரேஸராருடைய நினைவைப் பின்சென்றிருக்கக் கடவரான நம்மாசார்யர்களால் அவர்கள் அங்கீகரிக்கப்படமாட்டார்களென்றிட்டு நம்மாலு மநாதரிக்கப்பட்டது.'

என்பது. இதில் அடிமுதல் நுனிவரையில், பிராட்டிக்கு விபுத்வமில்லே, காரணத்வ மில்லே, ஸ்வாபாவிகமான சேஷித்வமில்லே, உபாயத்வமில்லே, ஐச்வர்யமில்லே, மற்ற ஜீவாத்மாக்களைக் காட்டிலும் உள்ள சில விசேஷங்கள் சரீரபேதத்தால் வந்தனவேயன்றி ஸ்வரூபத்தில் ஒரு

விசேஷமுமில்லை யென்று அவளுடைய பெரு மையையெல்லாம் அபிநிவேசத்துடன் நிரஸி த்து அதைச் சொல்லுமவர்களெல்லாம் அநாத ரணீயர் எனப்பட்டிருப்பது ஸ்பஷ்டம்.

ஸித்தாந்தம்

இதற்கெல்லாம் ப்ராமாணிகர்கள் சொல்லக்கூடிய ஸமாதாநத்தைக் கூறு கின்றோம். ஈச்வரனும் பிராட்டியும் ஒன்று என்ற வ்யக்த்யேகத்வ பக்ஷத்தை ஆதரிப்பவர் நம்மவர்களி லொருவருமில்லை. ஈச்வரனைக் காட்டிலும் அதிகமாயிருக்குமென்றது —

‘ஸ்ரீயம் கூவெதூ ாzவ ஹ ெெவவடியவீஹ ஷ ணாஃ ஸ்ரு ணஷராழ’

[பிராட்டி உன்னைக்காட்டிலும் உயர்ந்தவள் என்று பேசுகின்றோம். மிகுந்த ஆதரவோடு கேட்பாயாக]

என்றும்,

‘ாதடுெஃயிஃ ராக்ஷஸீஷுபி தடுெ (ெெ)வாஉ ராவராயாஷுயா ரக்ஷஷஹ வவ நாதஜாஆவஷதா ராஷேஹ ஸொக்ஷீ கூருதா॥’

[அம்மா ஸீதையே! உனக்குக் காவலாக ராவணன் நியமித்த ராக்ஷஸிகள் உன்னிடத்தில் அபசாரப்பட்டுக்கொண்டிருக்கும்பொழுதே நீ அவர்களை ஹநுமானிடத்திலிருந்து காப்பாற்றி ஞய். ராமன் என்னசெய்தார்? காகமும் விபீஷணனும் சரணமென்றுசொல்லி வந்து விழுந்த பிறகு காப்பாற்றினுர். உன்பெருமையைவிட எவ்வளவு குறைந்தது ராமன் பெருமை!] என்றும் ஸ்ரீகுணரத்நகோசத்தில் பட்டர் ஸாதித்திருக்கின்ற விஷயம். இந்த அதிகத்வம் அவ்வித மஹாவைபவமுள்ள பிராட்டியின் பதி என்று அவனுடைய பெருமையிலேயே முடிவதால் இதுவும் நிரஸநீயமன்று. அப்படியே, பட்டரும் நஞ்ஜீயரும் திருவுள்ளம்பற்றியிருக்கும் ‘பிராட்டிக்கு எம்பெருமான் ஸாம்யமுண்டு’ என்ற பக்ஷமும் ‘பத்நியாயிருக்குமாகாரம் தன்னிச்சையால் வந்தது’ என்றதுவும் நிரஸநீயமன்று. நிரஸித்து ஸாதிக்கவேண்டிய ஸித்தாந்தார்த்தம் ஒன்றுமில்லை. நிரஸிக்குமிடத்திலும் பட்டர்திருவுள்ளத்தை யநுஸரித்துச் செய்த ஸித்தாந்தத்திற்காக நஞ்ஜீயர் காட்டியருளிய ப்ரமாணங்பாயகதிகளுக்கு அந்யதாஸித்தி ஒன்றும் நிரூபிக்கப்படவில்லை. இதற்கு மாறாக தத்வஸங்க்ரஹத்தில் ஸ்வமதஸ்தாபநத்திற்காக எடுக்கப்பட்ட ப்ரமாணங்களுக்கும் ந்யாயங்களுக்கும் அந்யதாஸித்தி நஞ்ஜீயர் க்ரந்தத்திலுள்ள உபபாதநங்களால் ஏற்படுகின்றது.

‘வஸொ அஸ வஹவொ வா யஜொநு’ என்ற ச்ருதி வாக்யத்தில் ‘வஸுஃ’ என்ற பக்ஷத்திலும், ‘அஸ’ என்ற பக்ஷத்திலும் அந்தந்த யஜமாநனுடைய பத்நிக்கு வ்யவச்சேதமில்லை. அப்படியே இங்கும் ‘ஸாம் ஸதெ ஷெவவஸுஃ’ என்கிற ஏகத்வச்ருதி பிராட்டியை வ்யவச்சேதிக்காது. ‘அவனுக்கு ஸமனில்லை’ என்றவிடத்தில் பிராட்டியோடு கூடின அவனுக்கு ஸமன் மற்றொருவன் இல்லை என்று அர்த்தமேதவிர தனக்கநுரூபையான தன்பத்நிக்கும் ஸாம்யமில்லை என்பதில்லை. ‘ஈஸெ ஹஸா நா’ என்ற ச்ருதியில் ஈசாநா என்ற ‘சாநச்’ ப்ரத்யத்தால் பிராட்டிக்கு ஈச்வரத்வம் ஸ்வாபாவிகமாகத்தோன்றுகிறது. ஆனால் இரண்டு ஈச்வரர்கள் என்று வருமே என்றால் அதற்காக விஷ்ணுபத்நீ என்று தாம்பத்யத்தைச் சொல்லிற்று என்று நஞ்ஜீயர் அருளிச்செய்தார். ஔபாதிகமாக ஈச்வரத்வத்தை அங்கீகரிக்கிற தத்வஸங்க்ரஹகாரர் ‘அப்போதுதான் ஈச்வரத்வித்வம் வாராதோ’ வென்றுவந்த சங்கைக்கு பத்நீத்வத்தை இட்டே பரிஹாரம் சொன்னார். ஸ்வாபாவிக ஈச்வரத்வபக்ஷத்திலும் இப்பரிஹாரம் துல்யமாகையால் ‘ஈச்வரத்வம் இரண்டாச்ரயத்தில் கிடக்குமாகில் அந்யோந்யம் ஆஜ்ஞாபங்கம் பிறக்கையாலே இருவருக்கும் ஈச்வரத்வம் குலையும்’ என்றது யுக்தமன்று. ‘வெஸுவஸ ஹாஸ தயொஃ’ என்று ஸ்வாபாவிகமான ஈச்வரத்வம் இருவருக்கு முண்டென்று வைத்தே சொல்லப்பட்டது. ஆகையால் ‘ஈஸெ ஹஸா நா’ என்றவிடத்தில் ஈச்வரத்வம் ஔபாதிகமென்பதற்காக விஷ்ணுபத்நீத்வம் சொல்லப்பட்டது என்றுகொள்வது ந்யாய்யமன்றென்பது ஸ்பஷ்டம். உபக்ரமத்தில் ஸ்வாபாவிகத்வம் தோன்றுவதற்குத் தக்கபடி உபஸம்ஹாரத்திலுள்ள பத்நீத்வத்திற்குத் தாத்பர்யம் கொள்ளவேண்டியது ந்யாயஸித்தம். ‘ஸாஹஷெ வஹ ஷொதஃ’ என்று முதலில் பத்நீத்வத்தை

எடுத்தது மேல்சொல்லப்படும் விசேஷமெல்லாம் ஔபாதிகமென்பதற்காக வென்கிறார் தத்வஸங்க்ரஹக்காரர். புருஷோத்தமன் காந்தனாயிருப்பது ஸ்வாபாவிகமோ ஔபாதிகமோ? உபாதியொன்றும் கூறுமையால் இரண்டாவது பக்ஷம் சேராது. முதல்பக்ஷத்தில் ஸ்வாபாவிகமான பத்நீத்வத்தை முதலில் எடுத்தது மற்றதும் ஸ்வாபாவிகம் என்பதற்காகவென்பது மிகப் பொருத்தமுள்ள கருத்தாகும். இது ஸ்துதிப்ரகரணம். இங்கே உனக்கு ஸ்வாபாவிகமாக ஒன்றுமில்லை- ஔபாதிகமாய் உண்டு என்பது சேருமாவென்றும் ஆலோசிக்கவேணும். 'यस्यास्ते महिमानमात्मन इव' என்று ஸ்வாபாவிகமான மஹிமையையே அபரிச்சேத்யமாக பிராட்டிவிஷயத்தில் ஆளவந்தார் ஸாதித்தார் என்கிறார் நஞ்ஜீயர். 'नारायण त्वयि न मृष्यति वैदिकः कः' என்று நாராயணபதத்தை விசேஷித்து எடுத்து 'ब्रह्मा शिवः शतमखः' என்று உத்தரார்த்தத்தில் ப்ரஹ்மாதிகளையும் சொல்லி வேதங்களை ப்ரமாணமாகக்கொண்ட எவன்தான் ஸ்வபாவஸித்தமாய் எல்லையில்லாததான பெருமை உமக்குண்டு என்பதை ஸஹியாமலிருப்பன் என்று சொல்லுமிடத்தில் 'த்வயி' என்பது ப்ரஹ்மாதிகளை வ்யவச்சேதிப்பது தவிர பிராட்டியை வ்யவச்சேதிக்குமென்பதற்கு ப்ரஸக்திலவலேசமுமில்லை.

'ईशाना जगतो विष्णुपत्नीति
विष्णुपत्नीत्ववेषेण हि सर्वस्य
जगत ईशिषे'

என்று தாத்பர்யசந்த்ரிகையில் ஸ்ரீ தேசிகன் ஸாதித்திருக்கிறார். இங்கு விஷ்ணுபத்நீத்வம் உபாதியென்று தாத்பர்யமன்று. கிந்து, ஐச்வர்யப்ரதிஸம்பந்திதாவச்சேதகம் என்று தாத்பர்யம். தண்டத்வேனேஷண தண்டம் கடத்திற்குக் காரணமென்றால் தண்டத்வம் உபாதியென்றும் தண்டத்தின் காரணத்வம் ஔபாதிகமென்றும் கொள்வதில்லை. காரணதாவச்சேதகம் தண்டத்வம் த்ரவ்யத்வாதிகளன்று என்று கொள்ளப்படும். அப்படியே இங்கும்.

'तदैश्वर्यस्य सांसारिकत्वात्
नैराज्यदोषः'

என்று கீழுள்ளபங்க்தியால் ஈச்வரத்வித்வதோஷம் வாராமைக்காக இது சொன்னது என்பது ஸ்பஷ்டம்.

'त्वामेवाहुः कतिचिदपरे त्वत्प्रियं लोकनाथम्' என்கிற ச்லோகத்தை இங்கு அநுஸந்திப்பது. மேலும் பிராட்டிக்கு ஈச்வரத்வத்தை அங்கீகரித்து அது ஸ்வாபாவிகமன்று, ஔபாதிகம் என்று ஸ்தாபிப்பதில் என்ன அபிப்ராயம்? என்ன விசேஷம்? என்பது விளங்கவில்லை. ஜபாபுஷ்பஸம்பந்தத்தால் ஸ்படிகத்தில் தோன்றும் ஆருண்யம்போன்றது இவளுக்குள்ள ஐச்வர்யமென்னில் ஐச்வர்யப்ரமமே இங்குள்ளது என்றதாகும். அப்போது 'ईशाना' என்ற ச்ருதிக்கு 'ஐச்வர்யப்ரமவிஷயபூதா' என்று பொருளாகும். முக்யார்த்தத்தை விடுவதும் இப்படி லாக்ஷணிகார்த்தத்தைக் கல்பிப்பதும் அத்யந்தம் அப்ராமாணிகம். ப்ரமந்தான் யாருக்கு என்று விசாரிக்கப் புகுந்தால் பரம துரவஸ்தையுண்டாம். புண்யவிசேஷாதீநமாக ப்ரஹ்மேந்த்ராதிகளுக்குள்ள ஐச்வர்யம்போன்றது என்னில் ப்ரஹ்மேந்த்ராதிகளின் ஆத்மஸ்வரூபம் ஸதாதநமாயிருக்க புண்யவிசேஷத்தால் நடுவில் வந்துபோகின்ற அவர்களுடைய ஐச்வர்யம் ஔபாதிகமாகலாம். பிராட்டியின் ஐச்வர்யமோவென்னில் அவள் ஸ்வரூபம்போலவே ஆத்யந்தரஹிதமாய் ஸர்வதா இருக்குமொன்றதலின் அவ்விதமாகாமல் ஸ்வாபாவிகமேயாம். ஆயினும் இவளுடைய ஐச்வர்யம் லக்ஷ்மீத்வப்ரயுக்தமாயில்லாமல் விஷ்ணுபத்நீத்வப்ரயுக்தமாயிருப்பதால் ஔபாதிகமென்னில் இதனால் விசேஷமொன்றுமில்லை. பிராட்டி ஸ்வரூபத்தில் ஐச்வர்யமுண்டு. இது லக்ஷ்மீத்வப்ரயுக்தமானாலென்ன, விஷ்ணுபத்நீத்வப்ரயுக்தமானாலென்ன? ச்ருத்யாதி ப்ரமாணாநுஸாரேண 'देवदेवदिव्यमहिषी' என்று ஆளவந்தார் ஸாதித்த ஸர்வலோகைச்வர்யம் இவ்விதமாக ஔபாதிகமானாலும் பிராட்டி ஆத்மகோடியில் அந்தர்பூதையல்லள் என்றும் ஈச்வரகோடியில்தான் அந்தர்பூதையென்றும் ஸாதிக்கவற்றாகையால் ஔபாதிகத்வஸ்தாபநத்திற்காகப்பட்ட பரிச்ரமமெல்லாம் நிஷ்ப்ரயோஜநம். இன்னும் பகவானுடைய ஐச்வர்யமும்

ச்ரிய:பதித்வப்ரயுக்த மெனலாம். 'அநந்யா நந்யலக்ஷ்யம்' என்று பிராட்டிக்கு விஷ்ணுபத்நீத்வம்போலே எம்பெருமானுக்கு ச்ரிய:பதித்வம் லக்ஷணமாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. 'புணர்ச்குமயனும்' என்ற பாசுரத்தில் 'புணர்த்த திருவாகித் தன்மார்வில்' என்றதை விவரிக்கும்போது

"தன் திருமார்பில் நித்யஸம்ச்லிஷ்டையாயிருக்கிற பெரியபிராட்டியாரை யுடையனாய். இது இப்போது சொல்லுகிறதென்னென்னில் ப்ரஹ்மாதிகளுக்கு நிர்வாஹகன் என்றவோபாதி லக்ஷ்மீஸம்பந்தமும் ஐச்வர்யத்துக்கு உடலாகையாலே. பெரிய பிராட்டியோட்டைச் சேர்த்தி நீர்மைக்கும் மேன்மைக்கும் உடலாயிருக்குமிறே."

என்று ஈட்டில் அருளிச்செய்யப்பட்டிருக்கிறது.

"ஈவாஜா ஹுயொமொ யஉ ா வரி வரம்ஸ்ரஹ சஷ்ஹுகு"

என்றதும் ப்ரஸித்தம். ஆகையால் பிராட்டியின் ஐச்வர்யம் ஔபாதிகமாயின் எம்பெருமானுடைய ஐச்வர்யமும் அப்படிப்பட்டதே. ஆயினும் எம்பெருமானுடைய ஐச்வர்யம் ஸ்வாபாவிகமெனலாமெனில் பிராட்டியினுடைய ஐச்வர்யமும் ஸ்வாபாவிகமெனலாம். எவ்விதத்திலும் இத் தம்பதிகளின் ஐச்வர்யம் ஒருவிதமானதே. விசேஷமொன்றுமில்லை. இப்படிக்கொள்ளாதபோது 'ஷுஶக நவஜெஜ்யா திஜூ-ாமெநஸு-ஸீ' என்றுஐச்வர்யத்தையும்சேர்த்து 'தவ ஹரவத ஜெஜெ வாயாரணா ஶுணராஶய:' என்று ஸமானமாக இருவருக்குமுள்ளகுணம் என்று ஸாதித்ததற்குவிரோதம் வருமென்று கவனித்துப் பார்க்கவேணும்.

வேதாந்த ஸூத்ரங்களில் பிராட்டியின் ப்ரஸ்தாவமே இராதபடியால் ஸகலவேதாந்த வேத்யத்வம் பரமபுருஷனுக்கேயன்றி பிராட்டிக்கில்லையாகையால் அவ்வித ஐச்வர்யம் இவளுக்கு இருக்க ப்ரஸக்தியில்லையென்று ஸூசநம் செய்யப்பட்டிருக்கிறது. ஆழ்வார், ஆளவந்தார், 'ப்ஹணி ஸ்ரீநிவாஸெ' என்ற ஸ்ரீபாஷ்யகாரர், இவர்களையெல்லாம் அதிக்ரமித்து ப்ரஹ்மஸூத்ரதாத்பர்யத்தை வேறுவிதமாக நிர்த்தாரணம் செய்யப்புகுவது நமக்கு நல்லதன்றென்று ஒருவர் சொல்லாமலே யாவருக்கும் விளங்கக்கூடிய விஷயம்.

<u>சாஸ்த்ராநுபந்தம் – 2.</u>

179529

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

க்ரந்தார்த்த பரிசுத்தி

[ஸ்ரீ. உப. வித்வான், திருவரங்கம், திருமலைதாதாசார்ய ஸ்வாமி M. O. L., திருப்பதி.]

'உத க்ஷ: வஶ்யந் ந ஜஶ வாவம்
உத க்ஷ: ஶ்ருண்ந் ந ஶ்ருணொத்யேநாம்।
உதொ க்ஷெஹ தகும் விஸஸ்ரெ
ஜாயெவ பத்ய உஶதீ ஸுவாஸா:॥'

என்கிறது வேதம். 'வாக்கை ஒருவர் கண்டும் காண்கிறாரில்லை. ஒருவர் கேட்டும் கேட்கிறாரில்லை. ஆனால் ஒருவருக்கு அது தன் ஸ்வரூபத்தைத்திறந்துகாட்டுகிறது. எப்படியெனில் 'உயர்ந்த ஆடையணிந்தஒரு பருவமங்கை அநுராகத்தோடு தன் கணவனுக்குத் தன் சரீரத்தை எப்படிக்காட்டுவாளோ அப்படி' என்பது இம் மந்த்ரத்தின் பொருள். சிரகாலம் குருகுலவாஸம்பண்ணி ஆசார்யாநுக்ரஹத்தையும் அதன்வழியாக ஈச்வராநுக்ரஹத்தையும் பெற்று அங்கங்கள் உபாங்கங்கள் என்கிற ஶாஸ்த்ரங்களையும் முறைப்படி கற்றவர்களுக்கே வேதவாக்யங்களின் பொருள் விளங்குமென்பது இங்கு கருதப்பட்டது. பொதுவாக எல்லா ஶாஸ்த்ரக்ரந்தங்கள் விஷயத்திலும் காணப்படும் உண்மை இது. முறைப்படி பயிற்சிபெறாதவர்களுக்கு க்ரந்தங்களிலுள்ள வாக்யங்களின் பொருள்கள் உள்ளபடி விளங்குவதில்லை. அதிலும் விபரீதப்போக்குள்ளவர்களுக்கு விப

ரீதப்பொருள்களே தோன்றுகின்றன. இதற்கு உதாஹரணமாக சிலவற்றை இங்குக் கூறுகின்றோம்.

(1) ச்ருதப்ரகாசிகையில் ஆரம்பத்தில் 'ஸ்ருஷ்டவ்ராத' என்கிறதை விவரணம் செய்யுமிடத்தில் 'ஸ்ருஷ்டஸம்பந்தீ வ்ராதோ ஸ்ருஷ்டவ்ராத:, ஸம்ஸ்ருஷ்டஸம்பந்திநோ வா தத ஏவ காரணாத் ஸ்ருஷ்டவதோ ரக்ஷ்யா இத்யபிப்ராய:'
என்றிருக்கிறது. ஶாஸ்த்ரார்த்தசந்த்ரிகை என்று பெயர்வைத்துச் சிலவிஷயங்களை எழுதப்புகுந்தவர்கள் இங்கு 'தத ஏவ காரணாத்' என்பதற்கு 'முற்சொன்ன விநதர்களின் விநதியே காரணமாக' என்று பொருள்கூறுகின்றனர். 'ஸம்ஸ்ருஷ்டஸம்பந்திநோ வா ததவைவ காரணாத்' என்றிருக்குமிடத்தில் ஸம்ஸ்ருஷ்டஸம்பந்தாச்சைவகாரணாத் என்கிற பொருள் அநாயாஸமாக அல்பவ்யுத்பத்தியுள்ளவர்கள் புத்தியிலும் படும். 'முற்சொன்ன விநதர்களின் விநதியே காரணமாக' என்று வாக்யரீதியில் ஸம்பந்தமேயில்லாதவிஷயத்தைப்பொருளாகக் கூறுகின்றனர்.

(2) இதேஇடத்தில் தத்வடீகையில் 'ஸ்ருஷ்டஸம்பந்தீ வ்ராத: | ஸ்ருஷ்டா தாநி ததீயாநி ச. ஷஷ்ட்யா ஸம்பந்தஸாமான்யே நிர்தேச:' என்றிருக்கிறது. ஸ்ருஷ்டாநாம் வ்ராத: ஸ்ருஷ்டவ்ராத: என்று ஷஷ்டீதத்புருஷன் இங்குள்ள ஸமாஸம். இந்த ஷஷ்டிக்குப் பொதுவாக ஸம்பந்தம் என்பது பொருள். அந்த ஸம்பந்தம் அபேதரூபமாயும் ஆச்ரிதத்வரூபமாயுமிருக்கும். அபேதமாம்போது வ்ராத: என்றால் தாநி-பூதங்கள் என்று பொருள்படும். ஆச்ரிதத்வமாம்போது ததீயாநி-பூதங்களைச்சார்ந்தவைகள் என்று பொருள்படும் என்பது இங்கு ஸ்ரீஸூக்தியின் அர்த்தம். விநதங்களான பூதங்களையும் ரக்ஷிக்கிறான எம்பெருமான்; அவற்றைச் சார்ந்தவைகளையும் ரக்ஷிக்கிறான் என்றதாயிற்று. இப்படிப் பொருளிருக்க,

'விநத விவித பூதங்களோடு ஸாக்ஷாத்ஸம்பந்தமோ பரம்பரா ஸம்பந்தமோ ஏதேனுமொருபடி தொடர்புடையவர்களையும் எம்பெருமான் ரக்ஷித்தருளுகிறான் என்று கொள்ளவேணும்'

என்று தேசிகன் நிரூபித்தருளினார் என்றால் இதைக் கேட்பாரார்? தாநி ததீயாநி ச என்பதற்கு உள்ள பொருள் விளங்கவில்லை. இராத பொருள் தோன்றிற்று.

(3) இதற்குமேல் தத்வடீகையில் 'ஸ்ருஷ்ட்யா வ்ராதஸம்பந்தேநாபேக்ஷ்யா:' என்றிருக்கிறது. கீழ்ச்சொன்னபடி அவற்றைச்சேர்ந்தவைகளையும் ரக்ஷிக்கிறான் என்று பொருள் கொள்ளாவிடில் 'பூதரக்ஷகதீக்ஷ' என்பதே அமையும். வ்ராதஶப்தமே அபேக்ஷிதமன்று. ஆகவே அது நிஷ்ப்ரயோஜநமாகும். இதை ப்ரயோகித்தேயிருக்கவேண்டியதில்லை. என்பது இதன் பொருள். இதற்குமேல்

'இல்லையானால் விவித என்னும் ஶப்தத்தோடே புநருக்தமாகும்'

என்றுகூறுவது தவறு. 'தேவத்வமநுஷ்யத்வாதிரூபமாய் நாநாவிதங்களான' என்று விவித என்பதற்கு அர்த்தம் கொள்ளப்படுகிறது. இதனால் அதற்கு எப்படி புநருக்தி? நாநாவிதங்களான பூதங்களுடைய ஸமுதாயம் என்றால் அந்த இரண்டுபதங்களும் ஒரேபொருளைக் கூறினதாக எப்படியாகும்?

(4) மேற்கூறிய பொருளினால் 'எம்பெருமானுருடைய குடல் துவக்குள்ள நம்போன்றவர்களும் அவருடைய ஸம்பந்தமே பற்றாசாக உத்தீர்ணராவோமென்பது' கிடைக்காது. ஆசார்யநிஷ்டாக்ரமத்திலே அவர் அநுஷ்டித்த ப்ரபத்தியில் ஆதுநிகர்களுக்கு அந்தர்பாவமில்லையாதலின். (நம்போன்றவர்களும் உத்தீர்ணராவர்கள், என்றிருக்க வேண்டுமா என்பதும் பராமர்சநீயம்.)

(5) 'பகவத்ப்ரவ்ருத்தி விரோதி ஸ்வப்ரவ்ருத்தி நிவ்ருத்தியே ப்ரபத்தி என்று ஸகல பூர்வாசார்யஸித்தாந்தம்' என்பது உண்மையன்று. இவர்கள் எடுத்த ப்ரபத்தி தர்மிக்ராஹக ப்ரமாணமான த்வமேவோபாயபூதோ மே பவேதி ப்ரார்த்தநா மதி:- சரணாகதிரித்யுக்தா என்ற வசநத்தில் ப்ரார்த்தனையை

ஸ்பஷ்டமாகச் சொல்லியிருக்கும்போது 'ஸ்வ ப்ரவ்ருத்தி நிவ்ருத்தி ப்ரபத்தி' என்பது எப்படிப் பொருந்தும்?

> 'ப்ரபத்யே......என்றொரு ஜ்ஞாநவிசேஷத்தைச் சொல்லுகிறது. அந்த ஜ்ஞாந விசேஷமாகிறது ...ஸ்வாகிஞ்சந்யாநுஸந்தான ரூபமாய் ப்ரார்த்தநா மதிஃ யாச்ஞா ப்ரபத்திஃ என்கிறபடியே ப்ரார்த்தநாகர்ப்பமாய்...தான் உபாய சரீரத்தில் அந்வயியாதே யதிகாரிக்கு விசேஷணமாய் மஹாவிச்வாஸாத்மகமான ப்ரதிபத்தி விசேஷம்'

என்று பெரியவாச்சான்பிள்ளை பரந்தபடியில் அருளிச்செய்திருக்கின்றார்.

> 'ஜ்ஞாநாந் மோக்ஷமாகையாலே மாநஸமான அநுஷ்டாநத்தைச்சொல்லுகிறது. ....உபாய ஸ்வீகாரம் சொல்லுகிறது.'

என்று முமுக்ஷுப்படியில் பிள்ளைலோகாசார்யர் ஸாதித்திருக்கின்றார். ஆகையால் உபாய ஸ்வீகாரமெனப்படும் கீழ்ச்சொன்ன ப்ரபத்தியை அநுஷ்டித்து ப்ரபந்நனான அதிகாரிக்கு அதற்கு மேல் ஸ்வப்ரவ்ருத்தி ஒன்றும் பேற்றுக்காக வேண்டியதில்லையென்பது பூர்வாசார்யர்களின் ஸித்தாந்தமேயன்றி ஸ்வப்ரவ்ருத்தி நிவ்ருத்தியே ப்ரபத்தி என்பதன்று. அப்போதும் பேறு புருஷார்த்தமாவதற்காக இரக்கம் வேணுமென்கிறார்கள்.

(6) ஸர்வதா அபரிசிதமான பூர்வமீமாம்ஸையில் சென்று பல அபார்த்தங்களைச் சொல்லுகின்றனர். தயாஹி—ஸ்நாதகன் விஷயத்தில் தஸ்ய வ்ரதம் என்று உபக்ரமித்து மேல் உபஸம்ஹாரத்தில் 'நேக்ஷேதோத்யந்தமாதித்யம்—வ்ரதம்' என்றிருப்பதால் உபக்ரமத்திற்குத் தக்கபடி உபஸம்ஹாரத்திலுள்ளதை நயனம் பண்ணுகிறோம். ப்ரக்ருதத்தில் 'அதைதத் வ்ரதம் யோக்தவ்யம்' என்று உபக்ரமித்து 'ஸர்வ வ்ரதம் ந கர்தவ்யம் ததவ்ரதவிரோதி நியம்' என்று வசநம் படித்திருக்கிறதா? இப்படியிருந்தாலன்றோ நிவ்ருத்தி ஸங்கல்பம் பொருளாகும்.

(7) 'தஸ்ய வ்ரதம்' என்று சொல்லியிருந்தும் அநுஷ்டிக்கவேண்டியதான காரியமொன்றும் மேலே சொல்லியிருக்கவில்லை' எனப்படுகிறது. சொல்லியிருக்கவில்லையென்று யார் சொன்னார்களோ? 'நேக்ஷேதோத்யந்தம்' என்பதற்கு முன் ச்லோகம்—

'வெவஷவீம யாரயெஷும் வொடிகணு கணூ...' இத்யாதி. மற்றும் பலவிதிகள் உண்டு. ஸ்வயம் புஸ்தகவேக்ஷணபலம் இது.

(8) 'இது ப்ரவ்ருத்திரூபமான காரியமன்றாகையால் வ்ரதவிதியாக எப்படியாகும்? என்று பூர்வபக்ஷம்' எனப்படுகிறது. பாட்டதீபிகையில் இப்படிப் பூர்வபக்ஷமில்லை. 'வ்ரதி—ஷெயவவாயம வ...ஷாய... ...ணாஜி வ்ரதிஷெயவகூ' என்பது அங்குள்ள பூர்வபக்ஷம். தஸ்ய வ்ரதம் என்பதைப் பூர்வபக்ஷத்தில் தொடவே இல்லை. பர்யுதாஸம் என்பது ஸித்தாந்தம். இதை உபபாதிப்பதற்காக உபக்ரமத்தில் தஸ்ய வ்ரதம் என்றிருக்கிறது என்பது கூறப்படுகின்றது.

> ...
>
> வ்ரதெ...ஸஹம் ஐகதி।
>
> உஹயதிஃம யதி திஜிதம
>
> ஹா ஹஜ கிஃ...கயயெஃ ॥

ஸ்ரீ:

ந்யாயசிக்ஷணம்

[ஸ்ரீ. உப. திருக்கள்ளம், ச. கிருஷ்ணமாசார்ய ஸ்வாமி, வ்யாகரணசிரோமணி, திருவள்ளூர்.]

‘அதிஸர்வந்து வர்ஜித:’ என்கிற ப்ரயோகத்தைப்பற்றி விவாதம் நடந்துவருகிறது. இதன் ஔசித்யத்தை யதாமதி விஜ்ஞாபித்துக் கொள்ளுகிறேன்.

இவ்விடத்திலுள்ள ‘அதி:’ என்பது ஶப்தபரமா? அர்த்தபரமா? ஶப்தபரமாகில் ஸ்ரீ ஆதிவண்ஶடகோப யதீந்த்ர மஹாதேசிகனை ஸ்தோத்ரம் பண்ணி எழுதிய இடத்தில் ‘அதிஸர்வந்து வர்ஜித:’ என்று பதில் எழுத ஸாத்யமாகாது. ஏனெனில்:— இந்தவாக்யத்திற்கு, அதிகத்தை எல்லாவற்றிலும் விடவேண்டும் என்கிற கருத்தே இவ்விடத்தில் விளங்கும். இவ்விதம் அர்த்தம் கூறுவிடில் ஸ்ரீஸ்வாமியை ஸ்தோத்ரம் செய்தவரைக்குறித்து ‘அதி:’ என்கிற சொல்லை விடவேண்டும் என்று அர்த்தம் கூறினால் பதில் எழுதியது அர்த்தமற்றதாகிவிடும். அதி என்கிற சொல்லையே அவர் ப்ரயோகிக்காததால் அதைநிஷேதிப்பது ஸரியா? மேலும் ‘அதி:’ என்பதை ஶப்தபரமாகக்கூறினால் ‘ஸர்வந்து’ என்பதையும் ஶப்தபரமாக்கிக் கொள்ளவேணும். இல்லாவிடில் எல்லாவற்றிலும் அதி: என்கிற சொல்லை விடவேண்டும் என்கிற கருத்தே இவ்வாக்யத்திற்கு விளங்கும். இப்படி சொன்னால் அதி: என்பதை எந்த அர்த்தத்திலும் ப்ரயோகிக்கக் கூடாது என்று தோன்றும். அப்படியானால் அர்த்தமற்ற ‘அதி:’ என்கிற சொல்லை ப்ரயோகிப்பது அநுசிதம் என்று கூறவேண்டியதாகும். ஆகையால் ‘ஸர்வந்து’ என்பதையும் ஶப்தபரமாகவே சொல்லவேண்டும். ஶப்தபரமாகக் கூறினால் ஸர்வஶப்தத்துடனும் ‘அதி:’ என்கிற சொல்லை சேர்க்கக்கூடாது என்று கருத்துத்தோன்றும். அப்படியானால் அதிஸர்வ: என்கிறவிடத்தில் ஸர்வஶப்தத்துடன் அதி என்கிறசொல் சேர்ந்துவருவது அநுசிதமாகும். மேலும் லோகத்தில் ஶப்தங்களுக்கு அர்த்தபரத்வம் சொல்வது உசிதமாகும். இப்படி இருக்க பல பதங்களுக்கு ஶப்தபரத்வம் சொல்லுவது ஸமீசீனமன்று. கங்காதர க்ருஷ்ணத்ராவிடரால் ஸங்க்ரஹிக்கப்பட்ட ஸமயோசிதபத்யமாலிகையில் (நிர்ணயஸாகரப்ரஸ்ஸில் அச்சிடப்பட்டது) ‘அதிரேவாதிரிக்தார்த வாசிபிஶ்ச பராவணோ ஹத:। அதிஶா நாதிஶ்வாஸோ ஹ்ருதி ஸர்வந்து வர்ஜயேத்॥’ என்றே காணப்படுகிறது. இதனால் ‘அதி’ என்பதை அர்த்தபரமாகவே கூறவேணும் என்று ஏற்படுகிறது.

அர்த்தபரமாகக் கூறினால் ‘அதி:’ என்கிறவிடத்திலுள்ள விஸர்கத்திற்கு ச்ரவணம் ஏற்படாது. ‘ப்ராதய:’ என்கிற ஸூத்ரத்தினால் அத்ரவ்யார்த்தமான ப்ராதிகளுக்கு நிபாத ஸம்ஜ்ஞை விதிக்கப்படுகிறது. இங்குள்ள அத்ரவ்யார்த்தா: என்பதற்கு நஞிவயுக்தந்யாயத்தால் அப்ராஹ்மணமானய என்கிறவிடத்தில் போல் த்ரவ்யபிந்நமாயும் யத்கிஞ்சிதர்த்தவிசிஷ்டமாயுமுள்ள ப்ராதிகளுக்கு என்று அர்த்தம் சொல்லவேண்டும். ஆகையால்தான் நஞிவயுக்தந்யாயபரிபாஷேந்துஶேகரத்தில் ‘ந ஹி அப்ராஹ்மணமானயேத்யுக்தே லோஷ்டமானீய க்ருதீபவதி’ என்று கூறப்பட்டிருக்கிறது. ‘அதி’ என்பதற்கு அர்த்தம் கூறினால் ‘ப்ராதய:’ என்கிற ஸூத்ரத்தினால் நிபாத ஸம்ஜ்ஞை வந்து அதனடியாக ஸுலோபம் ஸித்திக்குமிறே. ஆகையால் அதி என்பதற்கு அர்த்தங்கூறினால் ‘அதி:’ என்கிற ப்ரயோகம் ஸித்தியாது. ஆக இரண்டுவிதமாகவும் இப்ரயோகம் ஸாதுவாகாது. ‘அதேஶ்ஶ்ருங:’ முதலிய ஸூத்ரங்களில் அதே: என்று சப்தபரமாதலால் ஸு விற்கு ச்ரவணமிருக்கிறது. இதனால் அதிஸர்வந்து வர்ஜயேத் என்பதே ப்ராமாணிகப்ரயோகம் என்று தோன்றுகிறது.

பலப்ரதன் என்று அறியாமலும், அங்கப்ரபத்தி பண்ணுமலுமா இவர் வித்யாநிஷ்டராக இருந்தார்? ஸாத்குண்யமிருப்பதால்தான் வித்யாதிகார ஸித்தாந்தம் என்னில், இப்படி புஷ்கலதர்மாசக்தர் பலஸாலபராய் இருக்க இவரைத்தேடி எடுப்பது எதற்காக? இதற்கு 'விதுராதிகரணம்' என்று எப்படிப் பெயர் வந்தது? 'அங்காஶக்தாதிகரணம்' என்றுதானே நாமகரணம் பண்ணவேண்டும்? 'விசாரம் அபத்நீகவிஷயம். உதாஹ்ருதர்கள் ஸபத்நீகர் என்னில், அப்போது ஸபத்நீகரிடத்தில் வித்யா தர்சனத்தால்அபத்நீகருக்கும் அதிகாரமுண்டு என்று ஸித்தாந்தம் செய்வது பொருந்தாது.

ஆகையால் இதில் உதாஹரிக்கப்பட்ட ரைக்வபீஷ்மஸம்வர்த்தர்களில் முதல்வர் ம்ருததாரராக இருந்தே தாராலாபத்தால் ஸர்வஸாதாரணஉபவாஸதபப்ரப்ருத்யங்கஸஹக்ருதவித்யாநிஷ்டராய் பின்பு ஜாநச்ருதிஜாமாதாவானவர். ஆகையால்தான் விதுராதிகரணத்தில் ரைக்வரை முதலில் உதாஹரித்தது. இரண்டாவதாகப் படிக்கப்பட்டவர் அக்ருததாரர். ஆகையால்தான் ச்ருதப்ரகாசிகையில் 'அக்ருததாரஶ்ச' என்று வ்யாக்டாநமுள்ளது. ப்ரஹ்மசர்யத்தை நிவர்த்தித்து ஏதோ காரணபலத்தால் அநாச்ரமியாக நிற்பவர் அக்ருததாரர். மூன்றுவதாகப் படிக்கப்பட்டவர் ஹ்ருததாரர். 'ஜ்யேஷ்டப்ராதாவாய் விரோதியான ப்ருஹஸ்பதியால் உபருத்ததாராக்நிகனுய் ஶரீரமாத்ரசேஷனுக இருக்கிறேன்' என்று ஸம்வர்த்தருடையவசநம்மஹாபாரதத்திலுள்ளது. 'நஷ்டே வாப்யபஹ்ருதே' என்று அக்ந்யபஹாரமும் நாசதுல்யமாக ஸ்மரிக்கப்பட்டது. அக்நிஸமபிவ்யாஹ்ருத தாரவிஷயத்திலும் அபஹாரம் நாசதுல்யமாகையால் இவருடைய பத்நீ ஜீவித்திருந்தும் அபத்நீகதுல்யரே. ஆகையால் இவரை மூன்றுவதாக உதாஹரித்தது. இப்படியாகில் அநேகமாகம்ருததாரர்கள் அதிகவயதானது முதலிய காரணங்களால் தாராலாபத்தால் அநாச்ரமிகளாக இருக்கை ஸம்பாவிதமாகையால் இதற்கு அபத்நீகஸாமாந்யம் விஷயமாக இருத்தலால் விதுராதிகரணம் என்று இந்த அதிகரணத்திற்குப் பெயர் வந்தது. இவர்களைப் போன்றவர்களும் யாசாநதிக்ருதராகையால் ஸாங்கவித்யோபஸம்ஹாராஸம்ர்த்தராகையால் அநதிகாரசங்கை. அபத்நீகர்களான ரைக்வ, பீஷ்ம, ஸம்வர்த்தர்களிடத்தில் வித்யா தர்சநத்தால் இவர்களைப்போன்றவர்களுக்கும் அதிகாரமுண்டு என்கிற ஸித்தாந்தமும் ஸமஞ்ஜஸம். 'ஸம்வர்தாதிஷு' என்கிற ஆதிபதத்தால் க்ரஹிக்கப்படுகிறவர்கள் கார்கீ முதலான யுகாந்தர கல்பாந்தர ஸ்த்ரீகள். 'புராகல்பேஷு நாரீணாம் மௌஞ்ஜீபந்தநமிஷ்யதே' என்று முன்கல்பத்தில் ஸ்த்ரீகளுக்கும் உபநயந, அத்யயந, ப்ரவ்ர்ஜ்யாதபச்சரணுதிகள் உண்டு. அத்யயநத்தில் உண்டான ஜ்ஞாநமே வித்யாதிகாரமானதால் அபசூத்ராதிகரணந்யாயத்தால் சூத்ரஸஹபடித ஆதுநிக ஸ்த்ரீகளுக்கு ப்ரஹ்மவித்யாதிகாரமில்லை. ஆகையால் 'ஸ்த்ரீ–ஶூத்ர–ஸஹபாடிநா–ஶூத்ரஸ்த்ரீகலிதாய வதந்தாநாம் வ்யவஹார: ஸம்பவதி। தத்ருஷ்டே:–ஸநாதநத்வேந ஸம்வர்தாதிஷு வித்யாதிகாரஸ்' என்கிற முச்யார்த்தமே. கௌண நிர்வாஹம் வேண்டியதில்லை.

உபநிஷத்பாஷ்யகாரஸ்வாமிக்கும் ஸ்ரீபாஷ்யாதிகளில்படியே பீஷ்மர் அநாச்ரமி என்றேதான் திருவுள்ளம். ஆகையால்தான் ஶாரீரகஶாஸ்த்ரார்த்த தீபிகையில் ஸ்ரீபாஷ்யத்தில் சொல்லப்பட்ட அநாச்ரமித்வகண்டோக்தியே 'தத்ருஷ்டே:' என்கிற ஸூத்ரகண்ட வ்யாக்யாநத்தில் காணப்படுகிறது. அவ்விஷயத்தில் அவருக்கு அபிப்ராயபேதமிருந்தால் அங்கு அவச்யம் அதை காண்பித்திருக்கவேண்டும். ப்ருஹதாரண்யகபாஷ்யத்திலும் பீஷ்மரை அநாச்ரமியாக நிர்த்தேசித்திருக்கிறுர். பாவப்ரகாசிகையில் அக்நீந்தநாத்யதிகரணத்தில் சொல்லியிருப்பது பரமத அந்வாரோஹண அங்குவந்த பூர்வபக்ஷத்தை கண்டநம் பண்ணினபடி என்று அந்த ப்ரகரணபராமர்சத்தால் ஏற்படுகிறது. பூர்வபக்ஷம், ஸந்யாஸிகளுக்கு வித்யாங்வய நிர்பந்தமிருந்தால் யஜ்ஞாநதிக்ருதருக்கு வித்யாங்வயம் வாராதாகையால் யஜ்ஞாநுஷ்டாநம் ஸபத்நீகனுக்கே யாகையால் விவாஹம் பண்ணிக்கொண்டு, யஜ்ஞாநுஷ்டாநம் பண்ணிக்கொண்டு பீஷ்மரைப்போல் ஊர்த்வரேதஸ்ஸாகவே இருக்கட்டும் என்று. மீமாம்ஸகர் சர்மப்ராதாந்யவாதிகளாகையால், வித்யை கர்மசேஷபூதையாகையால் யஜ்ஞாபாவே வித்யை

க்கு ப்ரஸக்தி இல்லை. பீஷ்மர் வித்வான் என்று நீங்கள் சொல்லுவதால் அவர் யஜ்ஞாநுஷ்டாநம் பண்ணியே இருக்கவேண்டும். பாரதவசநமும் இதற்கநுகூலமாகக் காணப்படுகிறது. யஜ்ஞம் பத்நியை அபேக்ஷிக்கிறது. பீஷ்மர் ஊர்த்வரேதஸ்த்வ ப்ரதிஜ்ஞை பண்ணினரேதவிர விவாஹம் பண்ணிக்கொள்கிறதில்லை என்று ப்ரதிஜ்ஞை பண்ணவில்லை. அவர் எப்படி ஊர்த்வரேதஸ்ஸாக இருந்தே விவாஹபூர்வகமாக யஜ்ஞாநுஷ்டாநம் பண்ணினரோ அப்படியே ஸந்யாஸிகளுக்கு மிருக்கட்டும் என்று பூர்வபக்ஷி தாத்பர்யம். அதை கண்டிப்பதில் நோக்குடையரான ஸ்வாமிச்சு, உன் மதப்படி பீஷ்மர் யஜ்வாவாயினும் ப்ரதிஜ்ஞைக்கு முன்பே தர்மப்ரஜோபயார்த்தவிவாஹம் பண்ணிக்கொண்டு யஜ்ஞாநுஷ்டாநம் பண்ணினர். ப்ரதிஜ்ஞாநந்தரம் ப்ரஜோத்பாதந நிவ்ருத்தரானர். ப்ரஜோத்பாத அநதிகாரிகளுக்கு தர்மமாத்ரார்த்த விவாஹம் சாஸ்த்ராநுமதமன்றாகையால் '[illegible]' என்று விவாஹத்தை சாஸ்த்ரம் விலக்கிற்று. ஆகையால் புத்ரதாரவித்தேஷணாத்ரயங்களை விட்ட ஊர்த்வரேதஸ்ஸுக்களுக்கு பீஷ்மத்ருஷ்டாந்தத்தால் எப்படி விவாஹம் ப்ராப்தமாகும்? என்று அங்கு தர்மமாத்ரார்த்த விவாஹகண்டநமாத்ரத்தில் நோக்கேயொழிய பீஷ்மருடைய கார்ஹஸ்த்யஸ்தாபநத்தில் நைர்பர்யமில்லை. பூர்வபக்ஷத்தைபரமதத்தால் கண்டிப்பது சாரீரகஸூத்ரங்களில் 'உபயவ்யபதேசாத்த்வஹிகுண்டலவத்' 'ப்ரகாசாச்ரயவத்வா தேஜஸ்த்வாத்' '[illegible]' '[illegible]' '[illegible]' இவை போன்றவைகளில் காணப்படவில்லையா? இதுவே வ்யாஸஸித்தாந்தமாகுமா? தீபத்தில்—ஜ்ஞாநேந்த்ரியங்கள் ஆறுக்கு மாத்ரம் உத்க்ரமண மருளிச்செய்தது தன்னுடைய ஸித்தாந்தமாகுமா? ஆகையால் ஒருவரால் செய்யப்பட்டக்ரந்தங்களில் விரோதப்ரதீதிகளுக்கு ஒன்று ஸ்வமதம் பற்றது மதாந்தரம் என்றே ஸமாதாநம் சொல்லுவது ந்யாய்யம்.

மற்றொரு ஸ்வாமி உபநிஷத்பாஷ்யகாரர் பீஷ்மருக்கு ஆச்ரமித்வத்தை ஸித்தாந்தித்திருப்பதாக நிர்ணயம் பண்ணிக்கொண்டு அது ப்ராமாதிகம் என்கிற ஸாத்யஸித்திக்கு த்ருஷ்டாந்தங்களை உதாஹரித்திருப்பது ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியாவில் காணப்படுகிறது. அதில்—

(1) ஹிரண்யதம்ஷ்ட்ர: என்கிற பதத்திற்கு ஹிரண்யவிதாரணதம்ஷ்ட்ராயுக்த: என்கிற அர்த்தமும் '[illegible]' என்பதற்கு [illegible] என்று விசேஷிப்பதும் அநுபபந்நம்; ஏனெனில் — நகங்களால் ஹிரண்யனைப் பிளந்தது புராணங்களிலும் லோகத்திலும் ப்ரஸித்தமாக இருக்க பற்களால் பிளந்தது என்று சொல்வது விருத்தம் என்று. கடினமான வஸ்துவைக் சோடாலியால் பிளந்து கைகளால் கிழிப்பதுபோல் ஸிம்ஹமாகையால் பற்களால் பிளந்து மநுஷ்யாம்சமாகையால் கை நகங்களால் கிழிப்பதில் என்ன விரோதம்? பற்களால் கிழித்ததாக இல்லையே. ஸம்வர்க்கவித்யோபாஸ்யதேவதை ஸ்ரீ ந்ருஸிம்ஹன் என்று ஸம்ப்ரதாயமாகையால் '[illegible]' என்கிறதை ந்ருஸிம்ஹபரமாக விசேஷித்ததும் ஸுஸங்கதம். ந்ருஸிம்ஹபரம் என்று நிர்தாரிதமான பின்பு ஹிரண்யபதத்திற்கு ரூட்யர்த்தம் சொல்வதில் ஔசித்யமிருக்க லக்ஷணையாக ரமணீயமென்று அர்த்தம் அவ்வளவு ஸ்வாரஸ்யமன்று என்று கொண்டு ஹிரண்யாஸுரன் என்று அர்த்தம் அருளியதும் மிக உபபந்நம்.

(2) புரீதத் என்கிற மாம்ஸபிண்டமே ஹ்ருதயத்தைசுற்றிக்கொண்டும் ஹ்ருதயத்திற்கு உள்ளேயும் வ்யாபித்திருப்பதில் என்ன விரோதம்? ஸாவயவவஸ்துவை ஸாவயவாந்யவஸ்து உள்ளும் மேலும் வ்யாபிப்பதில் என்ன விரோதம்?

(3) முக்தனுக்கு முக்ததசையில் ஜக்ஷணாதிகளும், ஜ்ஞாத்யாதி ஸம்பாதநங்களுமெல்லாம் புண்யபாபரூப கர்ம நிரபேக்ஷ பகவதிச்சாநுகுண ஸ்வேச்சாமூலங்களாகையாலே கர்மபலமன்றிக்கே அநுபவபரீவாஹரூபமான கேவலகைங்கர்யத்திலே அந்தர்பூதங்களென்று ஸ்ரீரஹஸ்யத்ரயஸார பரிபூர்ணப்ரஹ்மாநுபவாதிகாரத்தில் 'பித்ருலோககாம:' என்கிற ச்ருதியை விவக்ஷித்து ஜ்ஞாத்யாதிஸம்பாதநமெல்லாம்

என்றெடுத்து பகவதிச்சாநுகுணஸ்வேச்சாமூலகைங்கர்யாநுகுணம் என்றும் இதுவே ப்ராப்திகாஷ்டாபந்நமென்றும் நிஷ்கர்ஷித்திருப்பதால் முக்ததசையில் அப்ரஹ்மாத்மகஸ்வதந்த்ரவஸ்த்வநுபவேச்சை கூடாவிடினும் ப்ரஹ்மாத்மகவிசேஷணம்ஸாநுபூஷைக்கும் அல்பாஸ்திரஸாம்ஸாரிகவிஷயங்களில் ஸ்வதந்த்ரதயா பூர்வாவஸ்த்தையில்போலே அநுபவத்தில் வைராக்யத்திற்கும் விரோதமில்லை. இது 'உவஸ்ரூிதெ ௨தஸூஅவநாக' என்கிற ஸூத்ரபாஷ்யத்திலும் ஸுவ்யக்தம்.

ஸ்ரூதஸ வநதஸ்ஹஹ ஸுஹூணொ நிர்தி ஸயஹொ ஹுகவாஸ் । ௨ககுஸு ஸவுதொ விரககுஸு ஹுவ்யாகூாஸ ஜூவாதிதி வக்ஷாஸூ விஷயவாக்யீவிகாயாம் ஸூாதிவி ரெவ ஹுஉஸிதழ । வநதஹ்யாயஹு நஹு வவெஜாயா ஹுடிஹவிஷ்யீதி நாகூ ஸூாகம் ஹ ॥

[குறிப்பு:— இந்த வ்யாஸத்தில் சொல்லப்பட்ட ரீதியில் ஸ்ரீ. உப. வித்வான் ஷட்பாஷாகவி, தென்பரை ஸா. ஸ்ரீ. ராஜகோபாலாசார்ய ஸ்வாமியும் ஒரு வ்யாஸம் நமக்கு எழுதியனுப்பியுள்ளார். அந்த ஸ்வாமி ஸ்ரீந்ருஸிம்ஹ ப்ரியா 10-வது ஸம்புடம் 11-வது ஸஞ்சிகையில் உபநிஷத்பாஷ்யத்தில் சில இடங்களைப்பற்றி எழுதியதிற்கும் ஸ்ரீ. உப. வித்வான் மதுராந்தகம் தி. ஈ. வீரராகவாசார்ய ஸ்வாமி ஸமாதானம் எழுதியனுப்பிவிருக்கிறார். உபநிஷத்பாஷ்யகாரரிடம் தமக்கு எவ்விதத்திலும் ப்ரதிபத்திக்குறையில்லை யென்றும் விஷயங்கள் விசாரிக்கப்படவேண்டியதற்காகவே அவைகளைப்பற்றி ப்ரஸ்தாவம் ஏற்பட்டதென்றும் ஸ்ரீ. உப. தென்பரை ராஜகோபாலாசார்ய ஸ்வாமி மறுபடி நமக்கு எழுதியிருக்கிறார். விதுராதிகரணத்தில் தற்போது ஏற்பட்ட விசாரத்தில் சொல்லக்கூடியதெல்லாம் அனேகமாக இதுவரையில் வெளிவந்துள்ள வ்யாஸங்களில் சொல்லப்பட்டுவிட்டிருக்கிறது. இதில் சொல்லப்படாத விஷயங்கள் எழுதப்பட்டுவந்தால் அதை கவனிக்கலாம். இப்போது வந்தவிஷயங்களின்மேல் சோத்யங்களையோ பரிஹாரங்களையோ எழுதியனுப்புவதை ப்ரசுரிப்பது விரிவுக்கஞ்சி இத்தோடு நிறுத்திக்கொள்ளப்படுகிறது.

ஸம்பாதகர்]

ஸ்ரீ:

ஸதுபதேசம்

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

ஸ்ரீரங்கக்ஷேத்ரத்தில் ஸ்ரீரங்கநாதன் கோயிலை நினைத்துக்கொள்ளு. அது ஸ்ரீரங்கத்தின் நடுவில் இருக்கிறது அல்லவா? அதைப்போல் வைகுண்டம் என்பது ஒரு பெரிய திவ்யதேசம். அதனுடைய நடுவில் பெரியகோயில் ஒன்று இருக்கிறது. அது எவ்வளவு பெரியது என்றால்:— ஸுமார் கோடியோஜனை சுற்றளவு உள்ளது என்று நினைத்துக்கொள்ளு. இதற்கு நான்கு பக்கத்திலும் கோபுரவாசல்கள் இருக்கிறது. இந்த கோயிலைச் சுற்றி அனேகம் மதிள்கள். அவைகள் 'ப்ராகாரசதஸஹஸ்ராவ்ருதே' என்று வைகுண்டகத்யத்தில் ஸ்ரீபாஷ்யகாரர் ஸாதித்திருக்கிறபடி எத்தனையோ கணக்கிடமுடியாததான ப்ராகாரங்கள். ஒவ்வொரு ப்ராகாரத்திலும் பெரியதான முக்ய நான்கு கோபுரவாசல்கள். நாலுபக்கத்திலும் ஒவ்வொரு ப்ராகாரத்திலும் அளவில்லாத சிறியகோபுரவாசல்கள் இருக்கின்றன. இவ்வளவு பெரிய வைகுண்டலோகம் அம்ருதமயமான விரஜை என்று பெயர் உள்ள அனேகமாயிரம் மைல்கள் அகலமுள்ளதான ஒரு திவ்ய நதியினாலே சூழப்பட்டதாக இருக்கிறது. பெருமாள்கோயிலைச் சுற்றி உள்ளதான முதல் ப்ராகாரத்தில் நவரத்நகசிதமான நாநாவித ஸ்தம்

பங்களாலே அலங்க்ருதமான ஆஸ்தானமண்டபங்கள் நாலுபக்கங்களிலும் நிறைந்திருக்கின்றன. ஒவ்வொரு மண்டபத்தினுடைய ஸமீபத்திலும் அனேக நவரத்நகசிதமான படிகளோடு கூடியும், திவ்யதீர்த்தத்தோடு கூடியதாயுமுள்ளநாநாவிதபுஷ்கரணிகள். ஒவ்வொரு மண்டபத்தின் நான்கு பக்கங்களிலும் நாநாவிதமான திவ்யமான வாஸனைகளையுடைய புஷ்பலங்கள் நிறைந்த அனேக கல்பகவ்ருக்ஷங்களையுடைய உத்யானவநங்ள்.

இரண்டாவது ப்ராகாரத்தில் அத்யாச்சர்யகரமாயும், மநோஹரமாயும், அதிஜாஜ்வல்யமானமாயும், அத்யுந்நதங்களாயும், அதிமநோஹர கல்பகவ்ருக்ஷங்கள் நிறைந்ததாயும், நாநாவித ஸிம்ஹாஸநங்கள் நிறைந்ததாயும், அனேகலதாக்ருஹங்கள் நிறைந்ததாயுமுள்ள க்ரீடாபர்வதங்கள் நான்கு பக்கத்திலும் எண்ணிறந்தனவாய் இருக்கின்றன. ஆங்காங்கு வாபீகூப தடாகாதிகள். இம்மாதிரி அனேக ப்ராகாரங்கள் இருக்கின்றன.

சில ப்ராகாரங்களில் அத்யாச்சர்யமான ஸிம்ஹங்கள், கஜங்கள், குதிரைகள் நிறைந்த மிகவும் அழகான மண்டபங்களும், வர்ணிக்கமுடியாததான அனேக ம்ருககூட்டங்களாலே அலங்கரிக்கப்பட்ட விளையாட்டு க்ருஹங்களும், ஸ்வர்ணமயமான ஹம்ஸம் முதலிய ஜலத்தில் ஸஞ்சரிக்கிற பக்ஷிகள் நிறைந்ததான தடாகாதிகளும், மயில், கிளி முதலியவைகள் நிறைந்த திவ்ய வ்ருக்ஷங்களும் நான்கு பக்கத்திலும் அளவில்லாமலிருக்கின்றன.

இதற்கு மேலுள்ள அனேக ப்ராகாரங்களில் ஆதிசேஷன், கருடன், விஷவக்ஸேநர் முதலான அனேககோடி நித்யஸூரிகளுடையவும், ஆசார்யகடாக்ஷத்தாலே பக்தி ப்ரபத்தியையநுஷ்டித்து எல்லாபாபங்களினின்றும் விடுபட்ட அனேக முக்தர்களுடையவும் ஆச்சர்யமான திருமாளிகைகள் நிறைந்திருக்கின்றன. ஒவ்வொரு வீதிகளிலும் திவ்யாஸ்தானமண்டபங்கள், திவ்யக்ரீடாபர்வதாதிகள். நித்ய முக்தர்களுடைய அநுபவத்திற்குத் தகுந்த அனேகவித ரஸங்களைத் தரக்கூடிய கல்பக வ்ருக்ஷங்கள் நிறைந்த உத்யானவநங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு வீதியிலும் விஷ்வக்ஸேநருடைய ஸைன்யங்கள் நிறைந்த கச்சேரிமண்டபங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு திருமாளிகையிலும் நித்யமுக்தர்கள் நிறைந்து ஸகல ஸம்பத்து உடையவர்களாகவும் நித்யாநந்தபரிதர்களாகவுமிருக்கிறார்கள். இவ்வளவு நித்யமுக்தர்களுக்கும் தங்களுக்கு ஸமமான பரமாநந்தத்தைக் கொடுத்துக்கொண்டு திவ்ய தம்பதிகளான லக்ஷ்மியும் நாராயணனும் முன் சொன்ன கோயிலுக்குள் நடுவிலேயிருக்கும் கர்பக்ருஹத்திற்குள் ஆதிசேஷதல்பத்தில் எழுந்தருளியிருக்கிறார்கள். அந்த கர்பக்ருஹத்தினுடைய உள் அகலம் வைகுண்டவாஸிகளான அவ்வளவு பேரும் ஒரே ஸமயத்தில் சேர்ந்துநின்று பகவானை பஜநம் பண்ணுவதற்கு ஸௌகர்யமான விஸ்தாரமுள்ளது. அந்த கர்பக்ருஹமானது மரகத, கோமேதக, வஜ்ர, வைடூர்யங்களாலே இழைக்கப்பட்ட ஸ்வர்ணமயமானது. அதில் செய்யப்பட்டிருக்கிற திவ்யாலங்காரங்களைச் சொல்லிமுடியாது.

அங்குள்ள ஸ்தூபியின் நுனியில் பக்தப்ரபந்ந பாரிஜாத கல்பகத்தருக்களான லக்ஷ்மீநாராயணர்கள் உள்ளே எழுந்தருளியிருப்பதற்கு அடையாளமான அதிகம்பீரமான பக்ஷிராஜத்வஜத்தால் (கருடக்கொடியால்) அலங்கரிக்கப்பட்டிருக்கிறது. பூமிநீளைகளான பகவத்பத்நிகளும் ஆதிசேஷதல்பத்தில் லக்ஷ்மியோடு வீற்றிருந்து பகவதாநந்தகரமான ஆச்சர்யமான வார்த்தைகளைச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அந்த ஆதிசேஷன் அநேகம் திருப்பாற்கடலைச் சேர்த்து ஒரு பர்யங்மாகச் செய்தது போல் தன்னுடைய அதிசீதள ம்ருதுவாய் மிகவும் வாஸனையுள்ளதாய் இருக்கிற தன்னுடலை பர்யங்கமாக சுற்றிக்கொண்டு அதில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ பூமிநீளா ஸமேதரான பகவானுக்குத் தன்னுடைய ஆயிரம் பணங்களாலே சதசலாகமான குடைபிடிப்பதுபோலிருந்து கைங்கர்யம் பண்ணுகிறார். அவர் சாற்றிக்கொண்டிருக்கும் திருவாபரணம் முதலியதுகளுக்கு அளவு சொல்லிமுடியாது. ஆயிரம் தலைகளிலும் நாகரத்நங்கள் ப்ரகாசிக்கின்றன். இவ்வளவு பெரியதான ஆதிசேஷனாகிற பர்யங்கம் ஓர் அழகான எட்டு இதழ்களோடுகூடினதான தாமரஸபுஷ்பத்திற்குள் பெரிய வெள்ளிமலை போல் அமைந்திருக்கிறது. அந்த எட்டு இதழ் உடைய தாமரஸ புஷ்பத்தில் ஸகலாலங்காரபரி

தர்களான திவ்யாப்ஸரஸ்ஸுக்கள் சாமராதிகளைக் கையில் வைத்துக்கொண்டு அழகாக நின்றுகொண்டு கைங்கர்யம் செய்கிறார்கள். அந்த அஷ்டதளபத்மம் வேதமயங்களாயும் தர்மமயங்களாயுமுள்ள அதிவிசித்ரமான திவ்யபீடங்களின்மேல் அமைக்கப்பட்டிருக்கிறது. சிலர் பல்லாண்டு பாடுகிறார்கள். சிலர் ஸாமவேத காநாதிகள் செய்கிறார்கள். சிலர் விபவாவதார வைபவங்களைச் சொல்லி ஆநந்திக்கிறார்கள். சிலர் அர்ச்சாவதார வைபவங்களைச் சொல்லி ஆநந்திக்கிறார்கள். சிலர் உபயவேதாந்தவித்யா விசாரத்தை லீலார்த்தம் செய்கிறார்கள். ஸாத்விகர்களானவர்கள் செய்த வ்யாக்யாநாதிகளுக்கு வேதவிரோதமில்லாமலிருக்கும்படி அர்த்தம் சொல்லி ஆநந்திக்கிறார்கள். இம்மாதிரியான ஆச்சர்யங்கள் எவ்வளவு என்று எழுதிமுடியாது. எவ்வளவு இருக்கலாம் என்று நீ மனத்தால் நினைத்தாலும் அவ்வளவும் இருக்கக் கூடியதே. இவ்வளவு நித்ய முக்தர்களுடைய ஆநந்தகோலாஹலங்களையும் திவ்யதம்பதிகள் கடாக்ஷித்து அதிவிஸ்மிதர்களாய் மந்தஹாஸத்தோடு கூடியவர்களாய் அதிமதுரபாஷிகளாய் இருந்து கொண்டு புதியபுதியதான ஆநந்தங்களைத் தந்துகொண்டிருக்கிறார்கள்.

சிஷ்- ஸ்வாமிந்! என்ன ஆச்சர்யம். நேரில் வைகுண்டபோகமும், அதிலுள்ள பெருமாள்ஸந்நிதியும், அதிலுள்ள கர்பக்ருஹமும், அதிலுள்ள ஆதிசேஷதல்பமும், அதின்மேல் பூமிநீளைகளோடு திவ்யதம்பதிகளாயும், ஜகத்பதிகளாயும், விபுவான ஸ்வரூபத்தை உடையவர்களாயும், ஆச்சர்யமான திவ்யதிருமேனியோடு கூடியவளாயுமிருக்கிற மஹாலக்ஷ்மியும், ஸ்ரீமந்நாராயணனும் எழுந்தருளியிருப்பதும், அவர்களைக் கண்டு நித்யமுக்தர்கள் ஆநந்திப்பதும் கண்ணெதிரிலிருப்பதுபோல்தான் தோன்றுகிறது. நேரில் பார்த்தால் எவ்வளவு ஆநந்தமாயிருக்குமோ!

(தொடரும்)

ஸ்ரீ:

செய்திகள்

41-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் ஆராதனம் ஸ்ரீரங்கம்

ஷை ஸ்ரீ அழகியசிங்கரின் தீர்த்தம் ஐந்துநாள் முன்னதாக வேதபாராயணாதிகளுடன் ஆரம்பிக்கப்பட்டது. 6-11-51 தினம் காலையில் ஸ்ரீ அழகியசிங்கர் பிருந்தாவனத்திலிருந்து புறப்பாடு கண்டருளி தசாவதாரனை மங்களாசாஸனமாகி பிறகு அங்குள்ள வீதிப்ரமணமும் ஆனதும் சாற்றுமுறை மிகவும் நன்கு நடந்தது.

நரஸிம்ஹ தாஸன்

(கௌரவ ஏஜண்ட்)

ஓர் அபிநந்தநம்

கும்பகோணம் ஸ்ரீகாமகோடி பீடாதிபதி சங்கராசார்யஸ்வாமிகள் தென்னாற்காட்டை சேர்ந்த மஞ்சக்குப்பத்தில் ஓர் வைதிகதர்ம ஸம்மேளநத்தை நடத்திவைத்தார்கள். அநேக வித்வான்களைக்கொண்டு உபநயந, விவாஹாதிவைதிக சுபகர்மங்களின் மஹிமையைப்பற்றியும், ச்ராத்தாதிபித்ருகர்மங்களைப்பற்றியும் உபந்யாஸங்களைச் செய்துவைத்தார்கள். அவ்வமயம் ஹைகோர்ட் நீதிபதி கனம் டி. எல். வெங்கட்ராமையர் அவர்கள் அக்ராஸநம் வஹித்தார்கள். அநேகர் உபந்யாஸங்களைக் கேட்டுக் களித்தார்கள். இம்மாதிரி பலவிடங்களில் நடப்பது இக்காலரீதிக்கு நல்லதென்று பலர் அபிப்ராயப்படுகின்றனர்.

ஓர் ஸர்வஜன ஹிதைஷீ

17-11-51

ஸ்ரீ அழகியசிங்கர்களின் திருநக்ஷத்ர மஹோத்ஸவங்கள், ஸ்ரீரங்கம்.

நாளது கார்த்திகைமீ 15௳ [1-12-51] காலையில் 43-வது பட்டம் ஸ்ரீ வீரராகவசடகோபயதீந்த்ர மஹாதேசிகனது திருநக்ஷத்ர மஹோத்ஸவம் ஸ்ரீ அஹோபிலமடத்தில் மிக நன்றாக நடந்தது. அப்பொழுது ஆஸ்தான வித்வான் தேசிகதர்சனவிஜயத்வஜ, ஸ்ரீ. உப. புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசார்யார் ஸ்வாமி, புள்ளம்பூதங்குடி ஸ்ரீ உப. ராஜகோ

பாலாசார்யார் ஸ்வாமி, ரிடயர்ட் ஜட்ஜ் ஸ்ரீ. உப. ராகவ ஐயங்கார் ஸ்வாமி, ஸ்ரீ. உப. M. B. கிருஷ்ண ஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி முதலியவர்கள் கூடியிருந்து நடத்திவைத்தார்கள். ஸ்ரீபுத்தங்கோட்டகம் ஸ்வாமி ஸ்ரீ அழகிய சிங்கருடைய குணவிசேஷங்களைப் பற்றியும், நமக்கு பெரிய வைராக்ய நிதி கிடைத்திருப்பதாயும், இன்னும் அம் மஹானிடமுள்ள கல்யாண குணங்களைப் பற்றியும் கேட்பவர்க்கு மதுரமாயிருக்கும்படி உபந்யஸித்தருளினார்.

மறுநாள் கார்த்திகை 16உ (2—12—51) ஸ்ரீ அத்திப்பட்டு அழகிய சிங்கரின் திருநக்ஷத்ர மஹோத்ஸவத்தை ஸ்ரீராகவ ஐயங்கார் ஸ்வாமி (ரிடையர்ட் ஜட்ஜ்) மிகவும் அழகாக நடத்திவைத்தார்.

நரஸிம்ஹ தாஸன்

(கௌரவ ஏஜண்ட்)

ஸ்ரீ தில்லைஸ்தானம் ஸ்வாமியின் திருநக்ஷத்ர மஹோத்ஸவம், ஸ்ரீரங்கம்.

13—12—51ல் ஸ்ரீ தில்லைஸ்தானஸ்வாமியின் திருநக்ஷத்ர மஹோத்ஸவம் ஸ்ரீ தசாவதாரன் ஸந்நிதியில் விமர்சையாக நடந்தது. ஷை திருநக்ஷத்ரத்திற்கு பங்களூரிலிருந்து அநேக லௌகிக சிஷ்யர்கள் வந்திருந்தார்கள்.

நரஸிம்ஹ தாஸன்

(கௌரவ ஏஜண்ட்)

வேத ஸபா, எழும்பூர்.

ஸ்ரீ வேதஸபையின் ஆதரவில் சென்ற 4-8-51ல் ஓர் கூட்டம் நடைபெற்றது. கனம் நீதிபதி Ch. ராகவராவ் அவர்கள் தலைமை வகித்துப்பேசியதில் இது போன்ற வேதஸபைகள் நகரின் பல பாகங்களில் ஏற்படவேண்டுமென்றும் குழந்தைகளும் வேத அறிவு பெறுவது மிக அவசியமென்றும் கூறினார். ஸ்ரீமதி, லலிதா கிருஷ்ணமூர்த்தி ச்யாமளாதண்டக ச்லோகங்களை அழகாகப்பாடினுள். குழந்தைகள் பலர் விஷ்ணுஸஹஸ்ரநாமம், லலிதாஸஹஸ்ரநாமம், ருத்ரம் இவற்றிலிருந்து பல பாகங்களை ஒப்புவித்தனர். அட்வகேட் ஸ்ரீமான், D. ராமஸ்வாமி அய்யங்கார் அரியதொரு உபன்யாஸம் செய்தார். விஷ்ணுஸஹஸ்ரநாமம் முதலியவற்றின் பெருமையையும், நன்மையையும் விவரமாகக் கூறி நித்யகர்மாநுஷ்டாநங்களை சிரத்தையாக செய்வதனால் ஏற்படும் நற்பயன்களைத் தெளிவாகக்கூறினார்.

23–9–51ல் நடந்த கூட்டத்தில் திவான் பஹதூர் K. S. ராமஸ்வாமி சாஸ்திரிகள் புருஷஸூக்தத்தின் பெருமையைப்பற்றி அழகாக உபந்யஸித்தார்.

9–10–51ல் பெடரல்கோர்ட் ரிடையர்ட் நீதிபதி ஸ்ரீ. S. வரதாசார்யர் தலைமையில் நடந்த கூட்டத்தில் சென்னை ஸம்ஸ்க்ருத காலேஜ் பிரின்ஸிபால் ஸ்ரீ. K. பாலசுப்பிரமண்யசாஸ்திரிகள் 'வேதமஹிமை' என்றதொரு அரிய உபந்யாஸம் செய்தார். ப்ரம்ஹஸ்ரீ, M. R. V. சாஸ்திரி இந்த ஸபைக்கு காரியதரிசியாக இருந்து விசேஷ ஊக்கத்துடன் உழைத்துவருவதை தலைவர்களும் உபந்யாஸகர்களும் மிகவும் பாராட்டினார்கள்.

ஸபைக்கார்யதர்சி

திருப்பாவை

திருக்குடந்தை ஸ்ரீ அஹோபில மடத்தில் ஸ்ரீ அழகியசிங்கர் நியமனப்படி ஸ்ரீ. உப. வில்லூர் நடாதூர் வித்வான் ஆசுகவி சிரோமணி ஸ்ரீநிவாஸராகவாசாரியர்ஸ்வாமியால் கர வூ மார்கழி மீ 1உ (16-12-51) முதல் திருப்பாவை உபந்யாஸம் ஆரம்பிக்கப்பட்டு மார்கழி 29உ (13-1-52) ல் முடிவடைந்தது. கர வூ தைமீ 1உ (14-1-52) முதல் ப்ரதிதினம் மாலை 6–30 முதல் 7–30 வரை ஸ்ரீ பாதுகாஸஹஸ்ரம் உபந்யாஸம் செய்துவருகிறார்.

R. கண்ணன் அய்யங்கார். B. A. B. L

(கௌரவ ஏஜண்ட்,)

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸம்பாதகரின் குறிப்புகள்

யோ ரங்க்ஷ்யத் விஸ்வ வாசகானாம் ப்ரஸாதம்
ஸஞ்சய த்ருவிஷயஸ்ஸக்தியர: ஸ்வயாஜ்ஞா ।
சந்த்ராம்ச ஹஸ்த வாரண ஸ்ரவண ஸமாதீந்து
ப்ராணானபி ஸம்ப்ரததே வராஹாய தஸ்மை ॥

இம்மாதத்திலிருந்து ''ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா''வின் 11-வது ஆண்டு தொடங்குகிறது. ஆசார்யாநுக்ரஹத்தையும் விஷயப்ரதாநம் செய்யும் பண்டிதச்ரேஷ்டர்களின் ப்ரீதியையும் வாசக மஹாசயர்களின் அபிமானத்தையும் துணையாகக்கொண்டு இப்பத்திரிகை முன்னினுமதிகமான தன்னம்பிக்கையுடனும் உறுதியுடனும் தனது பணியிலீடுபட உத்தேசிக்கிறது. ''ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியை''யின் இந்த உத்தேசத்தை நிறைவேற்றிவைக்கும் பொறுப்பு ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடையதே.

* * *

இப்பத்ரிகையின் சென்ற வருஷாரம்பத்தில் நமது வாசகமஹாசயர்களிடம் நாம் விண்ணப்பித்துக்கொண்டிருந்ததை இவ்வருஷமும் அவர்களுக்கு நினைவூட்ட விரும்புகிறோம். எளிய நடையில் எல்லோருக்கும் விளங்கும்படி எழுதப்பட்டு மனத்தைக்கவரக்கூடிய அழகிய சிறு வ்யாஸங்கள் இப்பத்ரிகையில் அதிகமாக வரவேண்டுமென்பது நமது முக்ய மனோரதங்களில் ஒன்று. எதிர்பார்க்கப்பட்ட வேகத்துடனில்லாமல் சற்று மெதுவாகத்தான் அம்மனோரதம் பூர்த்தியை யடையவேண்டியிருக்கிறதென்று சென்ற ஸம்புடத்தில் வெளிவந்த வ்யாஸங்களிலிருந்து தெரியக்கூடும். நமது பண்டித ச்ரேஷ்டர்களின் பூர்ண ஒத்துழைப்பிருந்தால் இத்துறையில் இன்னும் சீக்ரமான முன்னேற்றத்தைக் காணலாமென்பதே நமது அபிப்ராயம். எனவே அவ்வித ஒத்துழைப்பைப் பெறுவதில் தீவ்ரமாய் முயற்சிக்கத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

* * *

எல்லா விஷயங்களையும் எல்லாரும் புரிந்துக் கொள்ளக்கூடிய வகையில் எளிய சிறு வ்யாஸங்களில் எழுதிவிடுவதென்பது ஸாத்யமில்லை. சாஸ்த்ரங்களில் பரிசயமிருந்தால்தான் சில விஷயங்கள் புரியக்கூடியவை. அப்படிப்பட்ட விஷயங்களை சாஸ்த்ரரீதியில் சர்ச்சை செய்யும் வ்யாஸங்கள் இப்பத்ரிகையில் வெளிவந்தால் சாஸ்த்ரபரிசயமுள்ளவர்கள் மேலும் விஷயங்களைத் தெரிந்துகொள்ளவும் சாஸ்த்ராப்யாஸம் பண்ணும் மாணவர்கள் சாஸ்த்ரார்த்தவிசாரம் பண்ணும் ரீதியைத் தெரிந்துகொள்ளவும் ஸௌகரியமாயிருக்குமென்று பல வித்வான்கள் அபிப்ராயப்படுகின்றனர். ஸரளமான வ்யாஸங்களை வரவேண்டுமென்ற பல வாசகமஹாசயர்களின் விருப்பமும், சாஸ்த்ரார்த்த விசாரரூபமான வ்யாஸங்களும் வெளிவரவேண்டுமென்ற பண்டிதர்களின் விருப்பமும் வெவ்வேறு திசைகளில் நம்மை இழுக்கின்றன. இருசாராரையும் த்ருப்தி செய்விக்கவேண்டியது நமது கடமை ஆகையால் சில மாறுதல்களைச் செய்ய உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. சாஸ்த்ரார்த்த விசாரரூபமாயும் வாதரூபமாயும், ஆக்ஷேபஸமாதானரூபமாயுமுள்ள வ்யாஸங்கள் தனி அநுபந்தமாக அவ்வப்போது வெளிவரும் சாஸ்த்ரபரிசயமுள்ளவர்களுக்கே இவ்வநுபந்தத்தில் வரும் வ்யாஸங்கள் பயன்படக்கூடியவை. இந்த அநுபந்தத்திற்கெனத் தனியாகச் சந்தா கிடையாது. 'ஸ்ரீ ந்ரு

ஸிம்ஹ ப்ரியா சந்தாதார்களில் இவ்வநுபந்தத்தை யார் அபேக்ஷிக்கிறார்களோ அவர்களுக்கு ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா ஸஞ்சிகையுடன் இவ்வநுபந்தம் சேர்த்து அனுப்பப்படும். இவ்வநுபந்தம் வரவேண்டுமென்று விரும்பும் சந்தாதார்கள் உடனே ஆபீஸுக்கு எழுதித் தெரிவிக்க வேண்டுமென்று ப்ரார்த்திக்கிறோம். சாஸ்த்ராநுபந்தத்தையும் அனுப்ப வேண்டுமென்று அபேக்ஷிக்காத சந்தாதார்களுக்கு இவ்வநுபந்தம் அநுப்பப்படமாட்டாது. சந்தாதார்கள் இதைக் கவனிக்கவேண்டுமென வேண்டுகிறோம்.

* * *

சாஸ்த்ரார்த்த விசாரரூபமாயுள்ள வ்யாஸங்கள் தனி அநுபந்தமாக வெளிவந்தால் ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியாவின் மற்ற பாகத்தில் வெளிவரும் வ்யாஸங்களில் சாஸ்த்ரார்த்தம் அடங்கியிருக்காதென்றோ அல்லது அவ் வியாஸங்களைப் புரிந்துகொள்ளுவதில் கொஞ்சம்கூட சிரமமேயிருக்காதென்றோ வாசகமஹாசயர்கள் எண்ணிவிடக்கூடாது. நமது ஸித்தாந்தத்திலும் ஸம்ப்ரதாயத்திலும் முக்யமாய் யாவரும் தெரிந்துகொள்ளவேண்டிய தத்வார்த்தங்களையும் ஆசாராநுஷ்டாநங்களையும் கூடியமட்டில் விளக்கிக்காட்டுபவைகளையும், இதிஹாஸபுராணாதிகளிலுள்ள கதைகளைச் சுருக்கி எடுத்துக்காட்டி அவைகளின் உட்கருத்தையும் உண்மையையும் எடுத்துக்காட்டுபவைகளாயும் ஆழ்வார் ஆசார்யர்களின் ஸ்ரீஸூக்திகளின் ரஸாஸ்வாதரூபங்களாயும், அவர்கள் பெருமையைப் பேசுபவைகளாயுமுள்ள வியாஸங்கள் ஒரு பகுதியாகவும் இவ்வர்த்தங்கள் விஷயமாய் சாஸ்த்ரரீதியில் விசாரித்து நிர்ணயம் செய்யும் வகையில் அமைந்துள்ள வ்யாஸங்கள் ஒரு பகுதியாகவும் வெளிவருவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இரண்டாவது பகுதிக்கு சாஸ்த்ராநுபந்தமென்று பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. முதற்பகுதியில் ஸாரளமான வ்யாஸங்களை அதிகமாக வெளியிடுவதற்கு வேண்டிய முயற்சி எடுத்துக்கொள்ளப்படும்.

* * *

ஆஸ்திகர்களனைவருக்கும் இப்பத்ரிகையால் அநேக நன்மைகள் ஏற்படவேண்டுமென்று பரமக்ருபையோடு ஸ்ரீ அழகியசிங்கரால் ஆரம்பிக்கப்பட்ட இப்பத்ரிகையைப் பேணிவளர்க்க வேண்டியது அவர்கள் கடமை. சக்தியுள்ளவர் ஒவ்வொருவரும் இதற்குச் சந்தாதாரராகச் சேரவேண்டும். சக்தியில்லாதவர்களும் இப்பத்ரிகையை வாசித்துப் பயனடையும் பொருட்டு ஸ்ரீ அழகியசிங்கர் நியமனப்படி இப்பத்ரிகை இம்மாதத்திலிருந்து அந்தந்த ஊரிலுள்ள ஒவ்வொரு ஸ்ரீ அஹோபிலமடத்திற்கும் அனுப்பப்பட்டுவரும். அவ்விடமுள்ள சிஷ்யகோடிகளும் அபிமானிகளும் மடத்திற்குச் சென்று பத்ரிகையைப் படித்து நல்ல விஷயங்களைத் தெரிந்துகொண்டு உஜ்ஜீவிப்பார்களென்று நம்புகிறோம்.

ஸ்ரீ:

ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா சந்தா வரவு: 1951 ஹு டிஸம்பர் மீ.

சந்தாஎண்		பெயரும் விலாஸமும்	வருஷம்	தொகை ரூ	அ
18	ஸ்ரீ	எம். கே. ஸ்ரீநிவாஸ ஐயங்கார், பம்பாய்.	52	3	0
26	,,	வி. வி. ஐயங்கார், பம்பாய்.	52	3	0
		ஆக மொத்தம்		6	0 0

(இதன் தொடர்ச்சி ராபர் 3-ம் பக்கம்)

திவாஸ்ய- வாஸனையூட்டி, தத்தாம்- கொடுக்கப்பட்ட, மாலாமபி- மாலையையும், சூடாபதேந- திருமுடியால், பரிக்ருஹ்ய- ஸ்வீகரித்து, ஸௌபாக்யஸம்பத்- தானே மங்களமாயும் மங்களத்தைச் செய்விக்கிறதுமான ஸம்பத்தில், அபிஷேக- அபிஷேகமாகிற, மஹாதிகாரம் - பெரிய அதிகாரத்தை, (யோக்யதையை) ப்ராயேண- அநேகமாக, பிபர்த்தி- பரிக்கிறார்.

(கரு) ஹே கோதே! ஸ்ரீரங்கநாதன் உனது மேல்உத்தரீயத்தையும், உன்னால் சூடி வாஸனையேற்றிக் கொடுக்கப்பட்ட மாலையையும் தன் திருமுடியால் ஸ்வீகரித்து ஸர்வமங்களமாகிற ஐச்வர்யத்தில் முடிசூடுவதற்குத் தகுதியுள்ளவனாக ஆகிறான்.
(உன் திருமாலை திருப்பரியட்டம் பெற்றவன் பெரும் பாக்யசாலியாகிறான் என்று கருத்து.)

𑌤𑍁𑌙𑍍𑌗𑍈𑌰𑌕𑍃𑌤𑍍𑌰𑌿𑌮𑌗𑌿𑌰𑌃 𑌸𑍍𑌵𑌯𑌮𑍁𑌤𑍍𑌤𑌮𑌾𑌙𑍍𑌗𑍈𑌃
𑌯𑌂 𑌸𑌰𑍍𑌵𑌗𑌨𑍍𑌧 𑌇𑌤𑌿 𑌸𑌾𑌦𑌰𑌮𑍁𑌦𑍍𑌵𑌹𑌨𑍍𑌤𑌿 ।
𑌆𑌮𑍋𑌦𑌮𑌨𑍍𑌯𑌮𑌧𑌿𑌗𑌚𑍍𑌛𑌤𑌿 𑌮𑌾𑌲𑌿𑌕𑌾𑌭𑌿𑌃
𑌸𑍋𑌪𑌿 𑌤𑍍𑌵𑌦𑍀𑌯𑌕𑍁𑌟𑌿𑌲𑌾𑌲𑌕𑌵𑌾𑌸𑌿𑌤𑌾𑌭𑌿𑌃 ॥ (19)

[துங்கைரக்ருத்ரிமகிர: ஸ்வயமுத்தமாங்கை:
யம் ஸர்வகந்த இதி ஸாதரமுத்வஹந்தி।
ஆமோதமந்யமதிகச்சதி மாலிகாபி:
ஸோபி த்வதீயகுடிலாளகவாஸிதாபி: ॥]

(அ-ம்) அக்ருத்ரிமகிர:- ஒருவராலும் இயற்றப்படாத வேதங்கள், துங்கை:- உயர்ந்த, உத்தமாங்கை:- சிரஸ்ஸான உபநிஷத்துக்களால், யம்- எந்த பகவானை, ஸர்வகந்த இதி- எல்லாவிதமான உயர்ந்த பரிமளஸ்வரூபன் என்று, ஸ்வயம்- தாங்களாகவே. ஸாதரம்- ஆசையோடு, உத்வஹந்தி- வஹிக்கின்றனவோ, ஸோபி- அந்த எம்பெருமானும், த்வதீய- உன்னுடையதான, குடிலாளக- சுருண்ட முன்நெற்றி மயிர்களால், வாஸிதாபி:- வாஸனையூட்டப்பட்ட, மாலிகாபி:- மாலைகளால், அந்யம்- விலக்ஷணமான, (சிறந்த) ஆமோதம்- வாஸனையை. அதிகச்சதி- அடைகிறான்.

(கரு) ஹே கோதே! ஒருவராலும் இயற்றப்படாத வேதங்கள் 'ஸர்வகந்த:' என்று எந்த பகவானை உயர்ந்த ஸர்வ பரிமளஸ்வரூபன் என்று தங்கள் சிரஸ்ஸுகளான உபநிஷத்துக்களால் ஆதரவுடன் கொண்டாடுகின்றனவோ அப்படிப்பட்டவனும் சுருண்ட உன் கேசங்களினால் வாஸனையூட்டப்பட்ட மாலைகளைச் சூடி விலக்ஷண வாஸனையை அடைகிறான். (இதனால் இம்மாலையின் பரிமளம் எல்லாவற்றிலும் உயர்ந்ததென்பதாகிறது.)

𑌧𑌨𑍍𑌯𑍇 𑌸𑌮𑌸𑍍𑌤𑌜𑌗𑌤𑌾𑌂 𑌪𑌿𑌤𑍁𑌰𑍁𑌤𑍍𑌤𑌮𑌾𑌙𑍍𑌗𑍇
𑌤𑍍𑌵𑌨𑍍𑌮𑍌𑌲𑌿𑌮𑌾𑌲𑍍𑌯𑌭𑌰𑌸𑌂𑌭𑌰𑌣𑍇𑌨 𑌭𑍂𑌯𑌃 ।
𑌇𑌨𑍍𑌦𑍀𑌵𑌰𑌸𑍍𑌰𑌜𑌮𑌿𑌵𑌾𑌦𑌧𑌤𑌿 𑌤𑍍𑌵𑌦𑍀𑌯𑌾𑌨𑌿
𑌆𑌕𑍇𑌕𑌰𑌾𑌣𑌿 𑌬𑌹𑍁𑌮𑌾𑌨𑌵𑌿𑌲𑍋𑌕𑌿𑌤𑌾𑌨𑌿 ॥ (20)

[தந்யே ஸமஸ்தஜகதாம் பிதுருத்தமாங்கே
த்வந்மௌளிமால்யபரஸம்பரணேந பூய: ।
இந்தீவரஸ்ரஜமிவாதததி த்வதீயாநி
ஆகேகராணி பஹுமாநவிலோகிதாநி ॥]

(அ—ம்) த்வந்மௌளி— உன்திருமுடியின், மால்யபர— மாலைகளின் ஸமூஹத்தை, ஸம்பரணேந- நன்றாய் தரிப்பதால், பூய:- மிகவும், தந்யே- க்ருதார்த்தமான, ஸமஸ்தஜகதாம் பிது: உத்தமாங்கே— ஸர்வஜகத்பிதாவான பகவானுடைய திருமுடியில், த்வதீயாநி— உன்னுடையவைகளான, ஆகேகராணி பஹுமாநவிலோகிதாநி—பஹுமானத்துடன் கூடிய அரைக்கண்பார்வைகள், இந்தீவரஸ்ரஜம்- கருநெய்தல் பூவினால் செய்யப்பட்ட மாலையை, ஆதததிவ- செய்கின்றனபோலும்.

(கரு) நீ சூடிக்கொடுத்த மாலையை எம்பெருமான் ‘தந்யோஸ்மி’ என்று தன் திருமுடியில் தரிக்கிறார். அப்படிப்பட்ட எம்பெருமானை நீ பஹுமானத்துடன் அரைக்கண் நோக்கோடு கடாக்ஷிக்கிறாய். அப்போது திருமுடியின்மேல் கருநெய்தல்மலர்மாலையும் சாற்றப்பட்டதோ என்னும்படி இருக்கிறது.

𑌰𑌙𑍍𑌗𑍇𑌶𑍍𑌵𑌰𑌸𑍍𑌯 𑌤𑌵 𑌚 𑌪𑍍𑌰𑌣𑌯𑌾𑌨𑍁𑌬𑌨𑍍𑌧𑌾𑌤𑍍
𑌅𑌨𑍍𑌯𑍋𑌨𑍍𑌯𑌮𑌾𑌲𑍍𑌯𑌪𑌰𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌮𑌭𑌿𑌷𑍍𑌟𑍁𑌵𑌨𑍍𑌤𑌃 ।
𑌵𑌾𑌚𑌾𑌲𑌯𑌨𑍍𑌤𑌿 𑌵𑌸𑍁𑌧𑍇 𑌰𑌸𑌿𑌕𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌲𑍋𑌕𑍀𑌂
𑌨𑍍𑌯𑍂𑌨𑌾𑌧𑌿𑌕𑌤𑍍𑌵𑌸𑌮𑌤𑌾𑌵𑌿𑌷𑌯𑍈𑌰𑍍𑌵𑌿𑌵𑌾𑌦𑍈𑌃 ॥ (21)

[ரங்கேச்வரஸ்ய தவ ச ப்ரணயாநுபந்தாத்
அந்யோந்யமால்யபரிவ்ருத்திமபிஷ்டுவந்த: ।
வாசாலயந்தி வஸுதே ரஸிகாஸ்த்ரிலோகீம்
ந்யூநாதிகத்வ ஸமதா விஷயைர்விவாதை: ॥]

(அ—ம்) ஹே வஸுதே—பூமிதேவியே! ரங்கேச்வரஸ்ய—ஸ்ரீரங்கநாதனுடையவும், தவ ச—உன்னுடையவும், ப்ரணயாநுபந்தாத்—ஸ்நேஹத்தின் ஸம்பந்தத்தாலுண்டான, அந்யோந்ய—ஒருவருக்கொருவருடைய, மால்ய—மாலைகளின், பரிவ்ருத்திம்—மாற்றுதலை, அபிஷ்டுவந்த:—ஸ்தோத்திரம் செய்கிற, ரஸிகா:—ப்ரஹ்மவித்துக்களான பெரியோர்கள், ந்யூநாதிகத்வஸமதாவிஷயை:—ரங்கநாதனுக்கும் நாச்சியாரான உனக்குமுள்ள தாழ்வு, உயர்வு, ஸமத்வம் இவைகள் விஷயமான, விவாதை:—விவாதங்களால், த்ரிலோகீம்—மூன்று உலகங்களையும், வாசாலயந்தி—சப்திக்கும்படி செய்கிறார்கள்.

(கரு) பூமிப்பிராட்டியின் அவதாரமான சூடிக்கொடுத்த நாச்சியாரே! ஸ்ரீரங்கநாதனுக்கும் உனக்கும் திருக்கல்யாணத்தில் ஏற்பட்ட மாலை மாற்றும் மஹோத்ஸவத்தை ஸேவித்து அநுபவிக்கும் மூன்றுலோகத்திலுமுள்ள ரஸிகர்களுள் ரங்கநாத பக்ஷபாதிகளான

சிலர் ‘‘நாயகனுனபடியால் ரங்கநாதன் தான் உயர்ந்தவன், நாயகியான கோதை அவனை விடத் தாழ்ந்தவள்’’ என்றும், உன்னுடைய பக்ஷபாதிகள் ‘‘தன் ஸௌந்தர்யத்தினுல் பகவானையும் ஆகர்ஷிக்கும்படியான சக்திபெற்றவளாதலால் இவள்தான் உயர்ந்தவள், இவளுக்கு ஸ்வாதீனனுனபடியால் பகவான் தாழ்ந்தவ’’னென்றும், மத்யஸ்தர்களான பலர் ‘‘இருவருக்கும் பரஸ்பரம் உண்டான அநுராகவிசேஷத்தால் மாலைமாற்றப்பட்டதாகையால் இருவரும் ஸமமானவர்களே’’ என்றும் இவ்விதமான கோஷங்களால் மூன்று உலகங்களிலும் நல்ல பேச்சைப் பரப்புகிறுர்கள்.

𑌦𑍂𑌰𑍍𑌵𑌾𑌦𑌳𑌪𑍍𑌰𑌤𑌿𑌮𑌯𑌾 𑌤𑌵 𑌦𑍇𑌵𑌿 𑌕𑌾𑌨𑍍𑌤𑍍𑌯𑌾
𑌗𑍋𑌰𑍋𑌚𑌨𑌾𑌰𑍁𑌚𑌿𑌰𑌯𑌾 𑌚 𑌰𑍁𑌚𑍇𑌨𑍍𑌦𑌿𑌰𑌾𑌯𑌾𑌃 ।
𑌆𑌸𑍀𑌦𑌨𑍁𑌜𑍍𑌝𑌿𑌤𑌶𑌿𑌖𑌾𑌵𑌲𑌕𑌣𑍍𑌠𑌶𑍋𑌭𑌂
𑌮𑌾𑌙𑍍𑌗𑌲𑍍𑌯𑌦𑌂 𑌪𑍍𑌰𑌣𑌮𑌤𑌾𑌂 𑌮𑌧𑍁𑌵𑍈𑌰𑌿𑌗𑌾𑌤𑍍𑌰𑌮𑍍 ॥ (22)

[தூர்வாதளப்ரதிமயா தவ தேவிகாந்த்யா
கோரோசநாருசிரயா ச ருசேந்திராயாః ।
ஆஸீதநுஜ்ஜிதசிகாவளகண்டசோபம்
மாங்கள்யதம் ப்ரணமதாம் மதுவைரிகாத்ரம் ॥]

(அ—ம்) ஹே தேவி! ப்ரணமதாம் - திருவடிதொழும் பக்தர்களுக்கு, மாங்கள்யதம்- மங்களங்களைக் கொடுக்கக்கூடிய, மதுவைரிகாத்ரம்-பகவானுடைய திருமேனியானது, தூர்வாதளப்ரதிமயா - அருகம்புல்போல் பசுமையான, தவகாந்த்யா - உன் காந்தியினுலும், கோரோசநாருசிரயா - கோரோசனைபோல் மனோஜ்ஞமான, இந்திராயாః - லக்ஷ்மியினுடைய, ருசா ச - (பொன்னிறமான) காந்தியினுலும், அநுஜ்ஜித - விடப்படாமலிருக்கிற, சிகாவளகண்டசோபம் - மயில்கழுத்தின் சோபையை உடையதாக, ஆஸீத் - ஆயிற்று.

(கரு) ஹே தேவி! பகவானுடைய இரு பக்கங்களிலும் லக்ஷ்மியும் நீயும் வீற்றிருக்கிறபடியால் உன் அருகம்புல்போல் பசுமையான காந்தியும், கோரோசனைபோல் பொன்னிறமான ஸ்ரீதேவியின் காந்தியும் பரவியிருப்பதால் நடுவிலிருக்கும் எம்பெருமான் திருமேனி, எப்போதும் மயிலின் கழுத்தைப்போன்று பல வர்ணங்களை உடையதாய் விளங்குகிறது. (ஸ்ரீதேவி எப்படி பகவானை விட்டுப்பிரியாமலிருக்கிறுளோ அப்படியே நீயும் விட்டுப் பிரியாமலிருந்து பக்தர்களுக்கு அருள்புரிகிறுய் என்று கருத்து.)

𑌅𑌰𑍍𑌚𑍍𑌯𑌂 𑌸𑌮𑌰𑍍𑌚𑍍𑌯 𑌨𑌿𑌯𑌮𑍈𑌰𑍍𑌨𑌿𑌗𑌮𑌪𑍍𑌰𑌸𑍂𑌨𑍈𑌃
𑌨𑌾𑌥𑌂 𑌤𑍍𑌵𑌯𑌾 𑌕𑌮𑌲𑌯𑌾 𑌚 𑌸𑌮𑍇𑌯𑌿𑌵𑌾𑌂𑌸𑌮𑍍 ।
𑌮𑌾𑌤𑌶𑍍𑌚𑌿𑌰𑌂 𑌨𑌿𑌰𑌵𑌿𑌶𑌨𑍍𑌨𑌿𑌜𑌮𑌾𑌧𑌿𑌰𑌾𑌜𑍍𑌯𑌂
𑌮𑌾𑌨𑍍𑌯𑌾 𑌮𑌨𑍁𑌪𑍍𑌰𑌭𑍃𑌤𑌯𑍋 𑌮𑌹𑍀𑌕𑍍𑌷𑌿𑌤𑌸𑍍𑌤𑍇 ॥ (23)

[அர்ச்யம் ஸமர்ச்ய நியமைர் நிகமப்ரஸூநைః
நாதம் த்வயா கமலயா ச ஸமேயிவாம்ஸம் ।

மாதச்சிரம் நிரவிசந் நிஜமாதிராஜ்யம்
மாந்யா மநுப்ரப்ருதயோபி மஹீக்ஷிதஸ்தே ||]

(அ-ம்) மாதஃ-தாயே! மாந்யாஃ-எல்லோராலும் பூஜிக்கத்தக்க, தே மநுப்ரப்ருதயஃ மஹீக்ஷிதோऽபி-அந்த மநு முதலான அரசர்களும், த்வயா-உன்னோடும், கமலயா ச-ஸ்ரீ தேவியோடும், ஸமேயிவாம்ஸம்-சேர்ந்திருப்பவனையும், அர்ச்யம்-உலகுக்கெல்லாம் பூஜிக்கத் தக்கவனுமான, நாதம்-ரங்கநாதனை, நிகமப்ரஸூநைஃ-வேதவ்ருக்ஷங்களின் புஷ்பங்களாகிற, (வேதங்களினால் ப்ரகாசிக்கப்பட்ட என்றபடி) நியமைஃ-நியமங்களோடு, ஸமர்ச்ய-ஆராதித்து, நிஜம் ஆதிராஜ்யம்-தங்கள் பூமண்டலாதிபத்யத்தை, சிரம்-வெகுகாலம், நிரவிசந்-அநுபவித்தார்கள்.

(கரு) தாயே! உலகத்தில் எல்லோராலும் கொண்டாடப்பட்ட மநு, மாந்தாதா முதலிய அநேக அரசர்கள் பூதேவிரூபையான உன்னோடும் பெரியபிராட்டியாரோடும் கூடியிருக்கிற ஸ்ரீரங்கநாதனை வேதங்களில் சொல்லப்பட்ட ஸந்த்யாவந்தநம், ஔபாஸநம், ஜபம், ஹோமம் முதலிய நியமங்களோடு நன்றாய் ஆராதித்து தங்கள் ஏகாதிபத்யத்தை நெடுங்காலம் அநுபவித்தார்கள்.

𑌆𑌰𑍍𑌦𑍍𑌰𑌾𑌪𑌰𑌾𑌧𑌿𑌨𑌿 𑌜𑌨𑍇𑌽𑌪𑍍𑌯𑌭𑌿𑌰𑌕𑍍𑌷𑌣𑌾𑌰𑍍𑌥𑌂
𑌰𑌙𑍍𑌗𑍇𑌶𑍍𑌵𑌰𑌸𑍍𑌯 𑌰𑌮𑌯𑌾 𑌵𑌿𑌨𑌿𑌵𑍇𑌦𑍍𑌯𑌮𑌾𑌨𑍇 ।
𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑍇 𑌪𑌰𑌤𑍍𑌰 𑌭𑌵𑌤𑍀 𑌯𑌦𑌿 𑌤𑌤𑍍𑌰 𑌨 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍
𑌪𑍍𑌰𑌾𑌯𑍇𑌣 𑌦𑍇𑌵𑌿 𑌵𑌦𑌨𑌂 𑌪𑌰𑌿𑌵𑌰𑍍𑌤𑌿𑌤𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 ॥ (21)

[ஆர்த்ராபராதிநி ஜநேऽப்யபிரக்ஷணார்த்தம்
ரங்கேச்வரஸ்ய ரமயா விநிவேத்யமாநே ।
பார்ச்வே பரத்ர பவதீ யதி தத்ர நஸ்யாத்
ப்ராயேண தேவி வதநம் பரிவர்த்திதம் ஸ்யாத்]

(அ-ம்) ஹே தேவி! ஆர்த்ராபராதிநி-அப்போதுதான் அநேக அபராதங்களைச் செய்திருந்தபோதிலும், ஜநே-ஆச்ரிதனானவன், ரமயா-பிராட்டியாலே, அபிரக்ஷணார்த்தம்-ரக்ஷிப்பதற்காக, ரங்கேச்வரஸ்ய-ஸ்ரீரங்கநாதனுக்கு, விநிவேத்யமாநே ஸதி-(இவன் மஹாபராதியாயிருந்தாலும் நம்மைச் சரணமடைந்தவனாகையால் அபராதங்களைப் பொறுத்து ரக்ஷிக்கவேணுமென்று) அறிவிக்கப்படும்போது, பரத்ர பார்ச்வே-ரங்கநாதனுடைய மற்றொரு பக்கத்தில், பவதீ-நீ, நஸ்யாத் யதி-இல்லாமலிருந்தால், வதநம்-அந்த பகவானுடைய திருமுகமானது, ப்ராயேண-அநேகமாக, பரிவர்த்திதம் ஸ்யாத்-திருப்பப்பட்டதாக இருக்கும்.

(கரு) தேவி! அப்போதுதான் மஹாபராதம்பண்ணினவனாக இருந்தபோதிலும் பிராட்டியிடம் புருஷகாரப்ரபத்திபண்ணினவுடன், பிராட்டி "என்னைச்சரணமடைந்தவனை உபேக்ஷிக்கக்கூடாது; அவச்யம் ரக்ஷித்துத்தானாகவேண்டும்." என்று பக்தன் விஷயமாக

பகவானிடம் தெரிவித்துக்கொண்டிருக்கும்போது, லக்ஷ்மியிடம் பரிபூர்ணப்ரீதியிருந்தாலும் மஹாபராதியான இவன் விஷயத்திலுள்ள கோபத்தால் பகவான் பிராட்டியின் வார்த்தைகளிலும் ஸம்மதி இல்லாமல் இடதுபக்கம் திரும்ப உத்தேசிக்கும்போது அந்தப்பக்கத்தில் பெரியபிராட்டியைக் காட்டிலும் அதிகக்கருணையுடைய பூமிப்பிராட்டியான நீ இருப்பதால் “இங்கு திரும்பினால் அதைக்காட்டிலும் அதிசத்தொந்தரவு ஏற்படும்” என்றெண்ணி இப்பக்கம் திரும்பாமல் வேறு வழியில்லாமல் பெரிபிராட்டியின் வேண்டுகோளுக்கே இணங்கி, ஆச்ரிதன்பக்கம் திரும்பி கருணையுடன் கடாக்ஷிக்கிறார். (ஆச்ரிதர் விஷயத்தில் ஸ்ரீதேவியும் பூதேவியும் ஐகமத்யமாய் கைவிடாமல் ரக்ஷிப்பதில் நோக்குடையவர்கள் என்று இதனால் சொல்லப்படுகிறது.)

𑌗𑍋𑌦𑍇 𑌗𑍁𑌣𑍈𑌰𑌪𑌨𑌯𑌨𑍍 𑌪𑍍𑌰𑌣𑌤𑌾𑌪𑌰𑌾𑌧𑌾𑌨𑍍
𑌭𑍍𑌰𑍂𑌕𑍍𑌷𑍇𑌪 𑌏𑌵 𑌤𑌵 𑌭𑍋𑌗𑌰𑌸𑌾𑌨𑍁𑌕𑍂𑌲𑌃 ।
𑌕𑌰𑍍𑌮𑌾𑌨𑍁𑌬𑌨𑍍𑌧𑌿𑌫𑌲𑌦𑌾𑌨𑌰𑌤𑌸𑍍𑌯 𑌭𑌰𑍍𑌤𑍁𑌃
𑌸𑍍𑌵𑌾𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑍍𑌯𑌦𑍁𑌰𑍍𑌵𑌿𑌷𑌹𑌮𑌰𑍍𑌮𑌭𑌿𑌦𑌾 𑌨𑌿𑌦𑌾𑌨𑌮𑍍 ॥ (25)

[கோதே குணைரபநயந் ப்ரணதாபராதாந்
ப்ருக்ஷேபஏவ தவ போகரஸாநுகூல: ।
கர்மாநுபந்திபலதாநரதஸ்ய பர்த்து:
ஸ்வாதந்த்ர்யதுர்விஷஹமர்மபிதா நிதாநம் ॥

(அ—ம்) ஹே கோதே! போகரஸ—போகங்களை அநுபவிப்பதற்கு, அநுகூல:—அநுகூலமாயும், குணை:—விலாஸம் முதலிய குணங்களால், ப்ரணதாபராதாந்—ஆச்ரிதர்களுடைய அபராதங்களை, அபநயந்—நீக்கிக்கொண்டிருக்கிற, தவ ப்ருக்ஷேப ஏவ—உன் புருவத்தின் நெறித்தலே, கர்மாநுபந்தி—துஷ்டகர்மங்களினால் கட்டப்பட்டவர்களுக்கு, (கர்மாவின் ஸம்பந்தப்பட்ட) பல—நிக்ரஹபலத்தை, தாந—கொடுப்பதில், ரதஸ்ய—ஆஸக்தனான, பர்த்து:—உன் நாதனுடைய, ஸ்வாதந்த்ர்ய—ஸ்வாதந்த்ர்யத்தின், துர்விஷஹ—ஸஹிக்கமுடியாத, மர்ம—ஜீவனஸ்தானத்தை, பிதா—பிளப்பதில், நிதாநம்—காரணமாகிறது.

(கரு) ஹே கோதாதேவி! பகவானுடைய போகரஸங்களுக்கு அநுகூலமானஉன் புருவங்களின் அசைத்தலே, ‘அவரவர்கள் கர்மத்திற்குத் தக்கபடி பலனை கொடுக்கவேணு’மென்று த்ருடமான ஸங்கல்பத்தை உடைய பகவானைத் தன் விலாஸம் முதலிய குணங்களால் ஆகர்ஷித்து அவனுடைய ஸ்வாதந்த்ர்யத்தை போக்கடிப்பதற்கு முதற்காரணமாகிறது. (உன் புருவஜாடைக்கு வசப்பட்டு எம்பெருமான் அபராதிகளிடமும் தன் நிக்ரஹஸங்கல்பத்தை ப்ரயோகிக்க ஸ்வாதந்த்ர்யமற்றவனாய் தன் ஸங்கல்பத்தை மாற்றி ஒரு தீங்கு மிழைக்காமல் காப்பாற்றுகிறான் என்று கருத்து.)

𑌰𑌙𑍍𑌗𑍇 𑌤𑌡𑌿𑌦𑍍𑌗𑍁𑌣𑌵𑌤𑍋 𑌰𑌮𑌯𑍈𑌵 𑌗𑍋𑌦𑍇
𑌕𑍃𑌷𑍍𑌣𑌾𑌮𑍍𑌬𑍁𑌦𑌸𑍍𑌯 𑌘𑌟𑌿𑌤𑌾𑌂 𑌕𑍃𑌪𑌯𑌾 𑌸𑍁𑌵𑍃𑌷𑍍𑌟𑍍𑌯𑌾 ।

𑌦𑍌𑌰𑍍𑌗𑌤𑍍𑌯𑌦𑍁𑌰𑍍𑌵𑌿𑌷𑌵𑌿𑌨𑌾𑌶𑌸𑍁𑌧𑌾𑌨𑌦𑍀𑌂 𑌤𑍍𑌵𑌾𑌂
𑌸𑌨𑍍𑌤𑌃 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯 𑌶𑌮𑌯𑌨𑍍𑌤𑍍𑌯𑌚𑌿𑌰𑍇𑌣 𑌤𑌾𑌪𑌾𑌨𑍍 ॥ (26)

[ரங்கேதடித்குணவதோ ரமயைவ கோதே
க்ருஷ்ணாம்புதஸ்ய கடிதாம் க்ருபயா ஸுவ்ருஷ்ட்யா ।
தௌர்கத்ய துர்விஷவிநாஶஸுதா நதீம்த்வாம்
ஸந்த: ப்ரபத்ய ஶமயந்த்யசிரேண தாபாந் ॥]

(அ–ம்) ஹே கோதே! ஸந்த:-பெரியோர்கள், ரங்கே—ஸ்ரீரங்கமாகிற ஆகாசத்தில் இருப்பதும், ரமயைவ—ஸ்ரீதேவியாலேயே, தடித்குணவத:-மின்னல்கொடியோடு கூடினதுமான, க்ருஷ்ணாம்புதஸ்ய—க்ருஷ்ணனாகிற நீலமேகத்தினுடைய, க்ருபயா ஸுவ்ருஷ்ட்யா—கருணையாகிற நல்ல மழையினால், கடிதாம்-சேர்க்கப்பட்டிருக்கிற, தௌர்கத்ய—தீக்கதிகளாகிற, துர்விஷ—கொடியவிஷத்தின், விநாச—நாசத்திற்கு, ஸுதாநதீம்—அம்ருத நதியாகிற, த்வாம்—உன்னை, ப்ரபத்ய—அவகாஹித்து, சரணமடைந்து, அசிரேண-சீக்கிரம், தாபாந்—ஸம்ஸாரதாபங்களை, ஶமயந்தி—போக்கடிக்கின்றனர்.

(கரு) வெய்யிலினால் வருந்தியவர்கள் நல்ல நதிப்ரவாஹத்தை அடைந்து தாபத்தை எப்படிப் போக்கடிக்கிறார்களோ அப்படியே ஸம்ஸாரதாபமாகிற கொடிய விஷத்தினால் கஷ்டமடைந்த பெரியோர்கள், மின்னல் கொடிபோன்ற மஹாலக்ஷ்மியுடன் கூடின நீலமேகம் போன்ற பகவானுடைய க்ருபையினால் உண்டுபண்ணப்பட்ட அம்ருதப்ரவாஹரூபமான உன்னைச் சரணமடைந்து தாபத்ரயங்களை ஒழிக்கிறார்கள்.

𑌜𑌾𑌤𑌾𑌪𑌰𑌾𑌧𑌮𑌪𑌿 𑌮𑌾𑌮𑌨𑍁𑌕𑌮𑍍𑌪𑍍𑌯 𑌗𑍋𑌦𑍇
𑌗𑍋𑌪𑍍𑌤𑍍𑌰𑍀 𑌯𑌦𑌿 𑌤𑍍𑌵𑌮𑌸𑌿 𑌯𑍁𑌕𑍍𑌤𑌮𑌿𑌦𑌂 𑌭𑌵𑌤𑍍𑌯𑌾𑌃 ।
𑌵𑌾𑌤𑍍𑌸𑌲𑍍𑌯𑌨𑌿𑌰𑍍𑌭𑌰𑌤𑌯𑌾 𑌜𑌨𑌨𑍀 𑌕𑍁𑌮𑌾𑌰𑌂
𑌸𑍍𑌤𑌨𑍍𑌯𑍇𑌨 𑌵𑌰𑍍𑌧𑌯𑌤𑌿 𑌦𑌷𑍍𑌟𑌪𑌯𑍋𑌧𑌰𑌾𑌽𑌪𑌿 ॥ (27)

[ஜாதாபராதமபி மாமநுகம்ப்ய கோதே
கோப்த்ரீ யதி த்வமஸி யுக்தமிதம் பவத்யா: ।
வாத்ஸல்யநிர்பரதயா ஜநநீ குமாரம்
ஸ்தந்யேந வர்தயதி தஷ்டபயோதராऽபி ॥]

(அ–ம்) ஹே கோதே! த்வம்—நீ, ஜாத—உண்டான, அபராதமபி—அபராதத்தை உடையவனாயிருப்பினும், மாம்—என்னை, அநுகம்ப்ய—மனமிரங்கி, கோப்த்ரீ அஸி யதி—ரக்ஷிக்கிறாயேயாகில், இதம்—இது, பவத்யா:—உனக்கு, யுக்தம்—தகுந்தது தான். ஜநநீ—தாயார், தஷ்டபயோதராபி—(குழந்தையால்) கடிக்கப்பட்ட ஸ்தநத்தை உடையவளாயிருந்தபோதிலும், வாத்ஸல்யநிர்பரதயா-குழந்தையிடம் ஸ்நேஹம் நிறைந்திருக்கிறபடியால், குமாரம்—குழந்தையை, ஸ்தந்யேந-பாலினால், வர்தயதி—வளர்க்கிறாள்.

(கரு) ஹே கோதே! நான் புத்திபூர்வகமாகவோ அபுத்திபூர்வகமாகவோ அநேக அபராதங்களைச் செய்திருந்தாலும் உன் தயைக்கு என்னை இலக்காக்கி ரக்ஷிக்கிறாய் என்பது உசிதம்தான். ஏனென்றால், குழந்தை பால் உண்ணும்போது தாயின் ஸ்தநத்தை கடித்தாலும் புத்ரவாத்ஸல்யத்தினால் கோபம் கொள்ளாமல் தாயார் குழந்தைக்குப் பால் கொடுத்தே வளர்க்கிறாளல்லவா? தாயான உனக்கும் என்னிடமுள்ள வாத்ஸல்யத்தால் என் அபராதத்தைப் பொறுத்து ரக்ஷிப்பது உசிதமே.

𑌶𑌤𑌮𑌖𑌮𑌣𑌿𑌨𑍀𑌲𑌾 𑌚𑌾𑌰𑍁𑌕𑌲𑍍𑌹𑌾𑌰𑌹𑌸𑍍𑌤𑌾
𑌸𑍍𑌤𑌨𑌭𑌰𑌨𑌮𑌿𑌤𑌾𑌙𑍍𑌗𑍀 𑌸𑌾𑌨𑍍𑌦𑍍𑌰𑌵𑌾𑌤𑍍𑌸𑌲𑍍𑌯𑌸𑌿𑌨𑍍𑌧𑍁𑌃 ।
𑌅𑌲𑌕𑌵𑌿𑌨𑌿𑌹𑌿𑌤𑌾𑌭𑌿𑌃 𑌸𑍍𑌰𑌗𑍍𑌭𑌿𑌰𑌾𑌕𑍃𑌷𑍍𑌟𑌨𑌾𑌥𑌾
𑌵𑌿𑌲𑌸𑌤𑍁 𑌹𑍃𑌦𑌿 𑌗𑍋𑌦𑌾 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌚𑌿𑌤𑍍𑌤𑌾𑌤𑍍𑌮𑌜𑌾 𑌨𑌃 ॥ (28)

[ஶதமகமணிநீலா சாருகல்ஹாரஹஸ்தா
ஸ்தநபரநமிதாங்கீ ஸாந்த்ரவாத்ஸல்யஸிந்து: ।
அலகவிநிஹிதாபி: ஸ்ரக்பிராக்ருஷ்டநாதா
விலஸது ஹ்ருதி கோதா விஷ்ணுசித்தாத்மஜா ந: ॥]

(அ-ம்) ஶதமகமணிநீலா-இந்த்ரநீலமணிபோல் நீலநிறமுடையவளும், சாருகல்ஹாரஹஸ்தா-அழகிய செங்கழுநீர் புஷ்பத்தை திருக்கையில் உடையவளும், ஸ்தநபாரநமிதாங்கீ-ஸ்தநங்களின் பாரத்தினால் கொஞ்சம் வளைந்த திருமேனியையுடையவளும், ஸாந்த்ரவாத்ஸல்யஸிந்து:-வாத்ஸல்யத்தால் நிறைந்த ஸமுத்ரமாயும், அலகவிநிஹிதாபி:-முன்னெற்றிக் குழலில் சூடப்பட்ட, ஸ்ரக்பி:-மாலைகளால், ஆக்ருஷ்டநாதா-தன் வசப்படுத்தப்பட்ட லோகநாதனை உடையவளும், விஷ்ணுசித்தாத்மஜா-விஷ்ணுசித்தருடைய அபிமானபுத்ரியாயும் இருக்கிற, கோதா-சூடிக்கொடுத்த நாச்சியார், ந:-எங்களுடைய, ஹ்ருதி-மனத்தில், விலஸது-ப்ரகாசிக்கவேண்டும்.

(கரு) இந்த்ரநீலமணிபோன்றகாந்தியையுடையவளும், செங்கழுநீர்புஷ்பத்தினால் அலங்கரிக்கப்பட்ட திருக்கையையுடையவளும், ஸ்தநபாரத்தால் சிறிது வணங்கிய சரீரமுடையவளும், புத்ரர்களான என்போன்றவரிடம் வாத்ஸல்யம் மிகுந்தவளும், தன் கூந்தலில் சூடிய மலர்மாலைகளால் லோகநாதனை வசப்படுத்தியவளும், பெரியாழ்வாரின் அபிமான புத்ரியுமான கோதாதேவி எப்போதும் என் மனத்தைவிட்டகலாகமலிருக்கட்டும். (அநேக திவ்யப்ரபந்தமுகத்தினால் ஆசார்யரூபமாய் உபகரித்தவளான கோதையை ஸதா த்யாயிப்பேனென்றபடி.)

𑌇𑌤𑌿 𑌵𑌿𑌕𑌸𑌿𑌤𑌭𑌕𑍍𑌤𑍇𑌰𑍁𑌦𑍍𑌗𑍃𑌹𑍀𑌤𑌾𑌂 𑌵𑍇𑌙𑍍𑌕𑌟𑍇𑌶𑌾𑌤𑍍
𑌬𑌹𑍁𑌗𑍁𑌣𑌰𑌮𑌣𑍀𑌯𑌾𑌂 𑌵𑌕𑍍𑌤𑌿 𑌗𑍋𑌦𑌾𑌸𑍍𑌤𑍁𑌤𑌿𑌂 𑌯𑌃 ।
𑌸 𑌭𑌵𑌤𑌿 𑌬𑌹𑍁𑌮𑌾𑌨𑍍𑌯𑌃 𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍋 𑌰𑌙𑍍𑌗𑌭𑌰𑍍𑌤𑍁𑌃
𑌚𑌰𑌣𑌕𑌮𑌲𑌸𑍇𑌵𑌾𑌂 𑌶𑌾𑌶𑍍𑌵𑌤𑍀𑌮𑌭𑍍𑌯𑍁𑌪𑍈𑌷𑍍𑌯𑌨𑍍 ॥ (29)

199529

இதி விகஸிதபக்தேருத்திதாம் வேங்கடேசாத்
பஹுகுணரமணீயாம் வக்தி கோதாஸ்துதிம் யஃ ।
ஸ பவதி பஹுமாந்யஃ ஸ்ரீமதோ ரங்கபர்த்துஃ
சரணகமலஸேவாம் சாச்வதீமப்யுபைஷ்யந் ॥]

(அ-ம்) இதி-இந்த ப்ரகாரம், விகஸித பக்தேஃ-கோதையின் திருவடிகளில் மலர்ந்த பக்தியையுடைய, வேங்கடேசாத்-ஸ்ரீவேங்கடநாதன் என்று ப்ரஸித்தரான ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகனிடமிருந்து, உத்திதாம்-எழுந்ததாயும், பஹுகுண-அநேக காவ்ய குணங்களாலும், ப்ரதிபாத்ய அர்த்தத்தின் வாத்ஸல்யாதி குணங்களாலும், ரமணீயாம்-அழகான, கோதாஸ்துதிம்-கோதாஸ்துதியை, யஃ-எவன், வக்தி-சொல்லுகிறானோ, ஸஃ-அவன், சாச்வதீம்-எப்போதும் இருப்பதான, ஸ்ரீமதோ ரங்கபர்துஃ-லக்ஷ்மியுடன்கூடிய ஸ்ரீரங்கநாதனுடைய, சரணகமலஸேவாம்-தாமரைபோன்ற திருவடிகளின் ஸேவையை, அப்யுபைஷ்யந்-அடையப்போகிறவனைக்கொண்டு, பஹுமாந்யஃ-இங்கும் கொண்டாடத் தகுந்தவனாக, பவதி-ஆகிறான்.

(கரு) கோதையின் பாதாரவிந்தத்தில் பக்த்யதிசயத்தை உடைய ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகனிடமிருந்து பக்தி பரவசத்தினால் தானாக உண்டானதும் அநேக காவ்யகுணங்கள் நிறைந்ததுமான இந்த கோதாஸ்துதியை நித்யம் அநுஸந்திப்பவன் இந்த லோகத்திலும் விஷ்ணுசித்தரைப்போல் எல்லோராலும் கொண்டாடப்பட்டு, பின்பு எப்போதும் அழிவற்ற பகவத்பாதாரவிந்த கைங்கர்ய ஸாம்ராஜ்யத்தையும் அடைகிறான். என்று பலச்ருதி.

𑌕𑌵𑌿𑌤𑌾𑌰𑍍𑌕𑌿𑌕𑌸𑌿𑌂𑌹𑌾𑌯 𑌕𑌲𑍍𑌯𑌾𑌣𑌗𑍁𑌣𑌶𑌾𑌲𑌿𑌨𑍇 ।
𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌵𑍇𑌙𑍍𑌕𑌟𑍇𑌶𑌾𑌯 𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤𑌗𑍁𑌰𑌵𑍇 𑌨𑌮𑌃 ॥

[கவிதார்க்கிகஸிம்ஹாய கல்யாணகுணசாலிநே ।
ஸ்ரீமதே வேங்கடேசாய வேதாந்தகுரவே நமஃ ॥]

			முன்பக்கப்படி	6	0
66	,,	பி. வி. குப்புஸ்வாமி ஐயங்கார், திருநெல்வேலி.	50–51	6	0
143	,,	டி. கே. நம்பி ஐயங்கார், மயிலாப்பூர்.	51	3	0
166	,,	வி. என். ரங்கஸ்வாமி ஐயங்கார், சிகந்தராபாத்.	48–51	12	0
193	,,	டி. ஆர். ராஜகோபால ஐயங்கார், கும்பகோணம்.	52	3	0
198	,,	பி. எஸ். ராகவ ஐயங்கார், திருநெல்வேலி.	50–52	9	0
247	,,	என். எஸ். நாராயண ஐயங்கார், ஸ்ரீரங்கம்.	51	3	0
297	,,	ஆர். ஸாரநாத ஐயங்கார், விருத்தாசலம்.	51	3	0
429	,,	ஏ. ஸ்ரீநிவாஸராகவாசாரியர், திருக்கோயிலூர்.	51	3	0
437	,,	கோபாலஸ்ரீநிவாஸாசாரியர், காரைக்குரிச்சி.	52	3	0
442	,,	கே. நரஸிம்ஹாசாரியர், நீடாமங்கலம்.	52	3	0
445	,,	பி. டி. சேஷாத்ராசாரியர், பாலூர்.	51–52	6	0
586	,,	டி. என். க்ருஷ்ணமாசாரியர், ரயிச்சூர்.	51	3	0
638	ஸ்ரீமதி	செல்லம்மாள் என்கிற ரங்கநாயகி அம்மாள், அன்னூர்.	51	3	0
651	ஸ்ரீ	க்ருஷ்ணஸபா, மாதுங்கா, பம்பாய்.	52	3	0
758	,,	எம். வி. வரதாசாரி, பம்பாய்.	51	3	0
759	,,	என். எஸ். வெங்கிடாசாரி, பம்பாய்.	49–50	6	0
760	,,	ஈ. ஆர். வி. ராகவன், பம்பாய்.	48	3	0
765	,,	டி. லக்ஷ்மீநரஸிம்ஹாசாரியர், பம்பாய்.	52	3	0
784	,,	எஸ். திருமலே ஐயங்கார், பம்பாய்.	50	3	0
787	,,	கிடாம்பி தேசிகாசாரியர், பம்பாய்.	50	3	0
795	,,	டி. துரைஸ்வாமி ஐயங்கார், ஓலக்கூர்.	51	0	14
826	ஸ்ரீமதி	ஜடம்மாள், ஸ்ரீரங்கம்.	51	3	0
834	ஸ்ரீ	பி. என். ஈஸ்வர (ராமாநுஜ) ஐயர், சாலபுரம்.	52	3	0
837	,,	வி. வெங்கடராகவ ரெட்டியார், மயிலாபூர்.	51	3	0
855	,,	வி. ஆர். கோபாலஐயங்கார், ஸ்ரீரங்கம்.	52	3	0
857	,,	வி. வி. சாரி, பம்பாய்.	51	3	0
860	,,	சே. ஆர். ஆராவமுதன், பம்பாய்.	51	3	0
861	,,	ஏ. ராஜகோபாலன், பம்பாய்.	51	3	0
862	,,	என். ராகவாசாரியர், பம்பாய்.	51	3	0
864	,,	டி. ஆர். ரங்காசாரி, கல்யான்.	51	3	0
876	,,	ஏ. ரங்கஸ்வாமி, பம்பாய்.	51	3	0
877	,,	பி. ராமஸ்வாமி, பம்பாய்.	51-52	6	0
880	,,	டி. எஸ். கே. சாரி, கும்பகோணம்.	51	3	0
881	,,	ஜீ. சாரங்கபாணி, பம்பாய்.	52	3	0

ஆக மொத்தம் ரூ. 132- 14

Regd. No- M. 4437.

OFFICE OF THE ... BOOKS
17 JAN 1952
MADRAS

முன்பக்கப்படி ரூ— 132 14

886	,,	டி. வெங்கடராகவாசார்யர், பம்பாய்.	51-53	9	0
887	,,	வி. ஸ்ரீநிவாஸன், பம்பாய்.	51	3	0
902	,,	எம். டி. [illegible] பம்பாய்.	51	3	0
903	,,	கே. ரங்கஸ்வாமி, பம்பாய்.	51	3	0
906	,,	ஏ. ராஜகோபாலன், பம்பாய்.	51	3	0
911	,,	கே. ஆர். ஆராவமுதன், பம்பாய்.	51	3	0
914	,,	என். கே. ஸ்வாமி, பம்பாய்.	51	3	0
916	,,	ஆர். [illegible] ஐயங்கார், பம்பாய்.	51	3	0
920	,,	கே. ராமஸ்வாமி, Dombireli, Thana Dt.	*51*	*3*	*0*
921	,,	டி. ராமஸ்வாமி, ,,	51	3	0
962	,,	ஏ. கே. சடகோபன், பம்பாய்.	51	3	0
963	,,	டி. கே. ஸ்ரீநிவாஸன், பம்பாய்.	51	3	0
967	,,	என். ராஜகோபாலன், செம்பூர், பம்பாய்.	51	3	0
970	,,	திவான்பஹதூர். ஆர். வரதாசாரியர், பம்பாய்.	51	3	0
973	,,	டி. வாஸுதேவாசார்யர், பம்பாய்.	51	3	0
978	,,	பி. என். டி. சாரி, பம்பாய்.	50-52	9	0
1010	,,	வி. கே. வாஸுதேவன், பம்பாய்.	51	3	0
1016	,,	கே. எஸ். சேஷாத்ரி ஐயங்கார், திப்பிரமசுதேவி.	52	3	0
1039	,,	எஸ். ராகவாசார்யர், Kalkuli.	*52*	*3*	*0*
1054	,,	பி. எஸ். ரங்கஸ்வாமி ஐயங்கார், பிராந்தியன்கரை.	52	3	0
1057	,,	ஜீ. பி. ஸாரதி, கல்கத்தா.	52	3	0
1076	,,	பி. வி. வரததேசிகாசாரியர், மேல்பாணமல்லூர்.	52	3	0
1119	,,	கே. வி. பார்த்தஸாரதி, Kirkee, பூனா.	52-pt	*1*	*8*
1158	,,	ஏ. ஆர். லக்ஷ்மணரெட்டியார், கட்டமுத்துபாளயம்.	51	3	0
1162	,,	எஸ். கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார், குளிக்கரை.	51	3	10
1163	,,	வி. திருவேங்கிடம் ஐயங்கார், Oorgaum.	*51–52*	*3*	4
1164	,,	கே. கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார், நுங்கம்பாக்கம்.	51–52	6	0
1167	,,	ஈ. வீரராகவன், ஐதராபாத்.	52	3	0
1168	,,	டி. கே. ஸ்ரீநிவாஸராகவாசார்யர், திருவல்லிக்கேணி.	52	3	0
1169	,,	டி. வி. நாராயண ஐயர் அண்டு ஸன்ஸ், பாலக்காடு.	51	3	0
1170	,,	எம். வி. சாந்தாவதாரம், பம்பாய்.	50–51	6	0
1171	,,	எல். சேஷாத்ரி, பம்பாய்.	52	3	0

மொத்தம் ரூ— *246 – 4.*

Printed by S. RANGACHARIAR, Srikaryam, Sri Ahobila Mutt, at Malola Press, 30, Panagal Street, Tiruvallore.
Edited and Published by P. S. SrinivasaDesikachariar, M.A., B.L., No, 2, Audiyappa Mudali Street, Vepery, Madras 7.

79529